
# பாவேந்தல் பாடல்கள்



பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகர சபை

# பொது நூல் நிலையம்

1. இப்புத்தகம் கடைசியாக குறிப்பிட்டிருக்கும் திகதியன்று கொடுபடல் வேண்டும். பின் தங்கும் நாளோன்றுக்கு 0.50/- சத வீதம் அறவிடப்படும்

2. இப்புத்தகத்தை பெறும் நீங்கள் அங்கத்தவருக்கோ அல்லது அங்கத்தவரல்லாதவருக்கோ இரவல் கொடுக்க கூடாது.

3. புத்தகங்களில் கீறிடுதல், எழுதுதல், பக்கங்களை மடித்துவைத்தல் போன்ற செயல்கள் தகாதவையென எச்சரிக்கப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

13691
894.8111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவேந்தல் பாடல்கள்

( இன்னிசைப் பாடல் தொகுப்பு )

பாலமுனை பாறூக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் உள்ள பாடல்களை,
இசை சேர்த்துப் பாடி
காணொளி வடிவமைத்துப் பகிர்ந்த
பல்துறைக் கலைஞர்
கோவிலூர் செல்வராஜன் அவர்களுக்கு
இந்நூல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | பாவேந்தல் பாடல்கள் |
| நூலாசிரியர் பெயர் | : | பாலமுனை பாறூக் |
| முகவரி | : | 14, பர்ஹானா மன்ஸில், பாலமுனை-03. (32354) இலங்கை. |
| தொலைபேசி | : | 0775367712 |
| பதிப்பு | : | நவம்பர் 2022, |
| வெளியீடு | : | பர்ஹாத் வெளியீட்டகம், பாலமுனை. 03 |
| பக்கங்கள் | : | xvi + 60 |
| விலை | : | Rs.600/- |
| அட்டை | : | எழுகவி ஜெலீல் |
| அச்சுப் பதிப்பு | : | நியு செலக்ஷன் அச்சகம், அக்கரைப்பற்று |

| | | |
|---|---|---|
| Book Title | : | Paaventhal paadalkal - |
| Author | : | Palamunai Farook |
| Address | : | 14 Farhana Manzil Plamunai-03. Sri Lanka |
| First Edition | : | November, 2022 |
| Published by | : | Farhath publication Palamunai 03 |
| Pages | : | xvi + 60 |
| Price | : | Rs 600/- |
| Cover Design | : | Elukavi Jaleel |
| Printed | : | New Selection Offset, Akkaraipattu |

ISBN:-978-955-99311-6-4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவேந்தல் பாடல்கள்-
## இசைப்பாடல் மரபுக்குப் புத்துயிரளிக்கும் அரிய முயற்சி

பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ்

கலாபூஷணம் கவிஞர் பாலமுனை பாறூக் அவர்களின் இவ்விசைப் பாடல் தொகுப்பு அவரது மற்றுமொரு கலை - இலக்கியப் பங்களிப்பாகும். இசைப்பாடல்கள் அல்லது பாடல்கள் பலவீனப் பட்டுள்ள இந்த நிலையில் இது ஒரு வரவேற்கப்பட வேண்டிய முயற்சி. அரபு, உருது இலக்கியங்களில் அவற்றின் செவ்வியல் காலம் முதல் இசை வரிகள் கொண்ட கவிதைகள் மிகப் பிரபலமானவை. அதை ஒரு முஸ்லிம் மரபாகவே எடுத்துக் கொள்ளலாம்.

இசைப் பாடல்களுக்கு நமது முஸ்லிம் நிலப் பரப்புக்களிலும் பெரிய வரலாறு உண்டு. புலவர் பாரம்பரியங்களி லிருந்து இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் பல நூற்றாண்டுகளாக நிலை பெற்றிருந்துள்ளன. செவ்வியல் இசை மரபிலும் நாட்டார் இசையிலும் பாடப்பட்டு அவை மக்களிடத்திலே செல்வாக்குப் பெற்றிருந்தன.

தற்கால இஸ்லாமிய கீதங்களை அதன் ஒரு நீட்சியாகத்தான் கொள்ள வேண்டும். வானொலியில் தோன்றி வானொலியில் மடிந்ததுதான் இலங்கையில் இஸ்லாமிய கீதத்தின் வரலாறு. சமய பக்திப் பாடல்கள் பாடுவது ஒரு வழக்கமாகியதால், இஸ்லாமிய கீதங்கள் விரிவான கருத்துகளின், உணர்ச்சிகளின் களமாவது தடுக்கப்பட்டது. சொன்னதையே திரும்பச் சொல்லும் வரட்சி இப்பாடல்களைப் பீடித்தன.

இஸ்லாமிய கீதங்கள் அரச மற்றும் சமயக் கட்டுப்பாட்டின் கீழ் வானொலியில் ஒலிபரப்ப எழுதப்பட்டதால் கடிவாளம் கடினமானதாகியது. தேர்ச்சி பெற்ற கலைஞர்கள் இதில் கலந்து கொண்டனர் என்றும் கூற முடியாது. வரிவடிவில் வளர்ச்சியற்ற கருத்துகளும், உணர்ச்சிகளுமாகத் தேங்கி இறுதியில் அது அழிந்தே விட்டது.

இப்போது, கலாபூஷணம் பாலமுனை பாறூக் இசைப் பாடல் மரபுக்குப் புத்துயிரளித்து வரும் முயற்சி மகிழ்ச்சி தருகிறது. சிந்துகள், சந்தங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி புதுக்கவிதைப் பாணியிலும் இசைப்பாடல்கள் வெற்றி பெற்றிருப்பதை சினிமா உள்ளிட்ட பல பாடல் வடிவங்களில் நாம் அவதானித் திருக்கின்றோம்.

ஒரு தொகுதி வசனங்கள்,அல்லது குறுங் கவிதைகள் பாடல்களாக அல்லது இசை தழுவிய வரிகளாக வெளிப்படுத்தப்படுவதை "பாடல்"எனலாம்.வசனங்களைக் கொண்டமையும் பாடல் வரிகள் இசைப் பாடல் வடிவத்தைப் பெறுகின்றன. சமயப் பாடல்கள், அரசியல் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள், எழுச்சிப் பாடல்கள், பாராட்டுப்பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள் என்று இவற்றையும் பலவாக வகுத்துக் கொள்ளலாம். நல்ல குரலும்,சுருதியும்,இனிய ராகமும் பாடல் வரிகளோடு இணையும் போது காதுக்கு இனிய பாடல்களைப் பெற்றுக் கொள்கிறோம்.இசைப் பாடல்களின் தவிர்க்க முடியாத இரண்டு பண்புகள் இசையும் கவிதை வரிகளுமாகும்.

கவிஞர் பாலமுனை பாறூக்கின் பாடல்களை இந்தப் பின்னணியில் இருந்து பார்ப்பதுதான் பொருத்தம். பாறூக் கவிஞர் என்பதால், இசைக்காக வரிகளை ஆக்கித் தருவது எளிமையாகிறது. இக்கவி வரிகளை இசை வடிவமாக்குவது மற்றொரு முயற்சி. பாடலாகக் கேட்பதில்தான் இவ்வரிகள் முழுநிறைவடைகின்றன. அத்தகைய பாடல்களே சிறந்த பாடல்களாகக் கொள்ளப்படும். கிண்ணி போல் கண்ணழகி,சொல்லத்தான் நானும்,அழகான ஒரு சோடிக் கண்கள் போன்ற இலங்கைத் தமிழ் இசைப் பாடல்களில் நாம் இதைக் கண்டுள்ளோம்.

இசையாக்கம் என்பது பெரிய முயற்சி. கோவிலூர் செல்வராஜாவின் உதவியுடன் கவிஞர் பாறூக் இதைச் சாத்தியமாக்க முயன்றுள்ளார். முன்னுதாரணமான முயற்சி என்ற வகையில் இதற்கு ஒரு பெறுமானம் உண்டு. கிழக்கு மாகாண முஸ்லிம் கவிஞர்கள்,பாடல்வரிகள் இயற்றக் கூடியவர்கள், இசைக் கலைஞர்கள் ஒன்றிணைவதன் மூலம் இவ்வகை இசைப் பாடல் மரபுக்கு உயிரூட்டலாம்.

ஐம்பதுக்கும் அதிகமான பாடல்கள் இயற்றப்பட்டு, அவை இசை வடிவமும் பெற்றுள்ளன.கோவிலூர் செல்வராஜாவின் இசைப் பங்களிப்பை நாம் பாராட்ட வேண்டும். வழமையான பக்திப் பாடல் மரபில் (இஸ்லாமிய கீதப் பாணி)பல பாடல்கள் எழுதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டிருந்தாலும் கருத்துக்கள் வகையில் குறிப்பிடத் தக்க மாற்றத்தை பாறூக் நிகழ்த்தி உள்ளார். நாட்டுப்பற்று, சமூக உணர்வு, பேரறிஞர் புகழ் எனப் பல தலைப்புகளில் பாடல்கள் உருவாக்கப் பட்டுள்ளன. சமூகக் கருத்துகளும், அவற்றை அழகு படு?த்தும் வரிகளும் இனிய இசையும் இல்லாது பாடல்கள் (Songs) வெற்றிபெறாது.

பாடல்களை அழகு படுத்தும் பல வரிகள் தொகுப்பில் மிளிர்வது மனதுக்கு இதமளிக்கிறது.

"நாயனே உன்னை" பாடலில்

"சொத்துக்கள் சுரண்டிச் சேர்த்தேன்
சொர்க்க மென்றே நினைத்தேன்."

"அழகான வாழ்க்கை" என்ற பாடலில்

"போலியான வாழ்வுக்குள்ளே ஏன்தான் தொலையணும்
புகழ்ச்சிக்காக வேஷம் போட்டு ஏன்நாம் அலையணும்"

அழகான வாழ்க்கை, மக்கள் சக்தி எழுந்தது, எப்படித்தான் சொல்லுறது போன்ற பாடல்கள் அகவலும், சந்தமும் எளிமையுமாக நம்மைக் கவர்கின்றன. அறிஞர் சித்தி லெவ்வை, கவிஞர் அப்துல் காதர் போன்ற வரலாற்று ஆளுமைகளை இசைப் பாடலாகத் தரும் ஒரு புது மரபும் இப்பாடல் தொகுதிக்குள் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய எழுச்சிகளையும், நாட்டின் இன்றைய சீரழிவுகளையும், அரசியல் வங்குரோத்து நிலைமைகளையும் பாடத் துணிவு பெற்றிருப்பது, கவிஞரை நோக்கி எமது கவனத்தைத் திருப்புகிறது.

" பெற்றோலில்லை டீசலில்ல
பிள்ளைக் கிஞ்ச பாலுமில்ல
பாணுமில்லை பருப்பு மில்ல
பள்ளிக் கூடப் படிப்பு மில்ல
கேட்கப் பார்க்க ஆருமில்ல"

சமகால அரசியல் இந்தப் பாடல்களை அதிக அர்த்தமுள்ள தாக்குகின்றது. நலிந்து, நொந்துபோன நாட்டைப் பற்றி கவிஞர் பாடும் வரிகளை ஒருநாள் வரலாறு பேசும். இலங்கை அரசியலைப் புரட்டிப் போட்ட "அரகல" உணர்வுகளையும் பாறூக் பாடலாக்கி உள்ளார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் சக்தி பாடலில்.

"இலங்கையர்கள் நாங்க ளென
இளைஞர் ஒன்று சேர்வதனால்
புதிய தொரு மலர்ச்சி தோன்றுமே"

இளைஞர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதாகவும் கவலையுள் ஆழ்ந்தோருக்கு உற்சாகமளிப்பதாகவும் அமைந்த பாடல் வரிகள் சில...

"உன்னை நம்பு உறுதி யெடு
உலகம் உனதே வெற்றி பெறு
..............................."

""நாயனின் நாட்டமின்றி
.................."

"வந்ததை எண்ணி எண்ணி
வருந்திடத் தேவை யில்லை
வந்ததும் கடந்து போகும்
வாழ்க்கையில் மகிழ்ச்சி மீளும்"

கிழக்கு மாகாணத்தில் இசைப் பாடலுக்கான வாய்ப்புகள் அதிகம். சிறந்த மெல்லிசை வார்ப்புக்களை உருவாக்கக் கூடிய கிழக்குப் பல்கலைக் கழக விபுலானந்த அழகியல் கற்கைகள் அருகில்தான் இருக்கிறது. பாலமுனை பாறூக்கின் பாடல் வரிகள் கோவிலூர் செல்வராஜாவின் குரலாய் ஒலிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர வேண்டும். அவ்வப்போது தோன்றி மறையும் முஸ்லிம் இசைப் பாடல் மரபுக்கு இது உந்து சக்தியாக அமையும்.

இனிய இராகங்கள்,குழுவினர் பாடல்கள்,இருவர் பாடல்கள்,பழைய புதிய இசைக் கருவிகளின் இன்னொலிகள் என்று இசை எண்ணங்கள் விரிவு பெறும்போது இதன் தாக்கம் சமூகத்தை மேலும் சென்றடையும்.இந்தவகைக் கலை முயற்சிகளுக்கு இளைஞர்களின் ஒத்துழைப்பும், சமூகத்தின் ஆதரவும் அவசியம்.

கவிஞர் பாறூக் இப்பணியைத் தொடர வேண்டும்.இசைப் பாடல் துறையில் இது ஒரு விழிப்புணர்வைக் கொண்டுவர வேண்டும். இதுவே எனது பிரார்த்தனை.

♦♦♦


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்துவமான படைப்பாளியின்
## வித்தியாசமான தொகுப்பு

பேராசிரியர் செ. யோகராசா

ஈழத்துப் படைப்பாளர்கள் பலரிடமிருந்தும் வித்தியாசமானதொரு படைப்பாளராக் பாவேந்தல் பாடல்கள் என்ற இன்னிசைப் பாடல்கள் கொண்ட இத்தொகுப்பிற் குரியரான பாலமுனை பாறூக் காணப்படுகின்றார் என்பது பற்றி முதலில் குறிப்பிட்டாக வேண்டும்.

எழுபதுகளளவில் கவிதைத் துறையூடாக எழுத்துலகில் பிரவேசித்தவர், சமகால ஈழத்துக் கவிதைச் செல்நெறிகளை சிறப்பாக வெளிப்படுத்து கின்ற கவிதைத் தொகுப்பொன்றுக்குப் பதமாக அமையக் கூடிய விதத்தில் "பதம்" என்றொரு தொகுப்பினை வெளியிடுகின்றார். அதன் சிறப்புக்கள் சில பற்றி "பாவேந்தல் பொன்னேடு" மலரில் இடம்பெற்றுள்ள ஆய்வொன்று எடுத்துக் காட்டுகின்றது. பின்னர் கவிதைத் துறைக்கு விடை கொடுத்துவிட்டு( கவனிக்க:- தனது கவித் திறனுக்கு விடை கொடுக்கவில்லை.) இன்னொரு துறைக்குள் நுழைகின்றார்.

2010 அளவில் நவீன காவியத் துறைக்குள் நுழைந்து,முஸ்லிம் மக்களது பண்பாடு,சமகால அரசியல், இயற்கை அனர்த்தம், முதுமை வாழ்வு என்பன சார்ந்தும், முதியோர் நிலை சார்ந்தும் நவீன காவியங்கள் நான்கு தந்து இத்துறையிலும் வலுவான- வளமான தடங்களைப் பதிக்கின்றார். இவை பற்றியும் ஆழமான கட்டுரைகள் வெளி வந்துள்ளன.

பின்னர் 2013 அளவில்,குறும்பா,ஹைக்கூ உலகிற்குச் சென்று , அவற்றின் ஒசையை தமிழ்நாடு வரை கேட்கச் செய்கின்றார். இப்போது, மெல்லிசைப் பாடல் என்கின்ற இன்னிசைத் துறை இவரை ஈர்த்துள்ளது.

ஈழத்தில்,ஏறத்தாழ எழுபதுகளில் இருந்து எண்பதுகள் வரை மெல்லிசைப் பாடல் புத்தெழுச்சி பெற்றிருந்தது. இவ்விதத்தில் இலங்கை வானொலியின் பங்களிப்பு கணிசமானது.ஈழத்தில் பல இடங்களி லிருந்தும் பாடலாசிரியர்கள் கலைஞர்கள் பலர் இனங்காணப் பட்டனர். எனினும், இவர்களது பாடல்கள் தொகுதியாக்கப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது கணிசமான பாடல்கள் -வாழ்த்துகள், போதனை, பக்தி,காதல்,பிரதேசப் பற்று இயற்கை முதலான விடயங்களைப் பாடு பொருளாகக் கொண்டிருந்தமை கண்கூடு.

மேற்குறிப்பிட்ட செல்நெறியுடன் ஒப்பிடும்போது இதிலுள்ள 54 பாடல்களில் 15 பாடல்கள் இஸ்லாமிய பக்திப் பாடல்களாக அமைகின்றன. இறை நம்பிக்கையையும், முஹம்மது நபி(ஸல்) அவர்களது சிறப்புக்களையும்,மார்க்க ரீதியிலான நடைமுறைகளையும் வெளிப்படுத்துகின்றன. ஒரு சில பாடல்கள் முஸ்லிம் புலவர்கள் பெரியார்கள் பற்றியன.

அதே வேளையில், இத்தொகுதி யிலுள்ள ஏனைய மெல்லிசைப் பாடல்களின் பாடு பொருள்கள் தனித்துவமானவை. இவை, பெரும்பாலானவர்கள் பாடாப் பொருள்கள் பற்றிப் பாடுகின்றன. ஈழத்தின் சமகால அரசியல், பொருளாதார நெருக்கடிகள் பற்றியவை இவற்றுள் முக்கியமானவை.

ஆண்டாண்டு தோறும் உலகளாவிய ரீதியில் சிறுவர், அன்னையர்,தந்தையர், ஆசிரியர் முதியோர் முதலானோர் சார்ந்தும் போதை ஒழிப்பு,சமாதானம் முதலியன சார்ந்தும்,சர்வதேச தினங்கள் கொண்டாடப் பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.எனினும், அவை பற்றிய கவனயீர்ப்பு போதியளவு நடைபெறுவதில்லை. வாசிப்புத் தினம் வாசிப்பு மாதமாகக் கூடக் கொண்டாடப்பட்டு வருகின்றது. எனினும், அதுபற்றி எவரும் அதிகளவு பொருட் படுத்துவதில்லை. இத்தகைய அவப்பேறான நிலையில்,இத்தியாதி விடயங்கள் சார்ந்த பாடல்கள் இத்தொகுதியில் இடம் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.

மொழிப்பற்று,இனப் பற்று என்பன போன்று பிரதேசப் பற்றும் அவசிய மானது. இதற்கும் முக்கியத்துவம் கொடுப்பவர் சிலரே. இத்தொகுப்பி லுள்ள " பாலமுனை" பற்றிய பாடலும் இவ்விதத்தில் கவனத்திற்குரிய தாகின்றது.

வெளிப் பாட்டு முறையில், இம் மெல்லிசைப் பாடல்களின் தனித்துவங்களுள் முக்கியமானவை பேச்சு மொழி, பிரதேச வழக்காறு ஆகியவை இப்பாடல்களில் பயின்று வந்திருப்ப தாகும். இன்னிசையால் மட்டுமன்றி, இவ்விதத்திலும்- பாரதியாரின் வார்த்தையில் கூறினால் "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டொரு வருஷத்து நூற் பழக்கமுள்ளவர்கள்" கூட இம்மெல்லிசைப் பாடல்களால் ஈர்க்கப்படுவ ரென்பதில் ஐயமில்லை.

இம் மெல்லிசைப் பாடல்களின் அழகியல் குறித்து விரிவஞ்சி எதுவும் கூறவில்லை. ஆயினும் முக்கியமான இரு விடயங்கள் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். ஒன்று: இப்பாடல்கள் முகநூலில் காணொளி வடிவத்திலும் வெளியிடப்பட்டிருப்பது. மற்றொன்று : மெல்லிசை-இன்னிசைப் பாடல் துறையிலும் கவிஞர் தமது ஆள்திறமையை நிலை நாட்டியுள்ளமை.

கவிஞருக்கு நமது வாழ்த்துகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவேந்தல் பாடல்கள்
## பார்முழுதும் பரவட்டும்!

அருமை நண்பர் பாலமுனை பாறூக் அவர்கள் இலங்கையின் தமிழ் இலக்கியப்பரப்பில் பாவேந்தல் பாலமுனை பாறூக் என்று நன்கு அறியப்பட்டவர். இவர், கவிதை, காவியம், குறும்பா, திறனாய்வு, என்று இலக்கிய எழுத்து தளங்களிலும்,கவிதை வாசித்தல், கவியரங்கிற்கு தலைமை தாங்குதல் என்று மேடைக் களங்களிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் இயங்குபவர்.

கொரோணா பெருந் தொற்றில் அடங்கி இருந்த காலத்தில் இருந்து விழிப்புணர்வு, சமூகம், இஸ்லாம், நபிகள் நாயகம், அறம், ஆதங்கம், ஏமாற்றம், விரக்தி, ஊரின் பெருமை என்று பல தளங்களில் பாடல்களை எழுதி வந்தார். இன்றும் எழுதுகின்றார். அவர் எழுதும் பாடல்களை அவ்வப்போது எனக்கு புலனம் வழியாக அனுப்பி வைப்பார். அவர் அனுப்பும் படைப்புகளை நான் பாடல்களாக, மெட்டுப் போட்டு, மெட்டுக்கு ஏற்ற இசைக் கோலத்தைத் தெரிவு செய்து பாடல்களாக்கி பின்னர் பொருத்தமான காணொளிக்குள் உட்படுத்தி அனுப்புவேன். அவர் அவற்றை தனது முகநூல் பக்கத்தில் பதிவிடுவார். நானும் எனது முகநூல் பக்கதில் பதிவிடுவேன். மற்றும் புலனத்தில் இருக்கும் நண்பர்களுக்கும் பகிர்ந்து கொள்வேன். அப்படி பாடிய பாடல்கள் ஏராளம். எனக்கு எத்தனை என்று சரியாக நினைவில்லை. அவருக்கு நினைவிருக்கும். இப்படி அவர் எழுதிய பாடல்களை "பாவேந்தல் பாடல்கள் " என்ற தலைப்பில் நூலாக இன்று தமிழ் இலக்கியப் பரப்பில் வெளியிட்டு இருக்கின்றார். பல விருதுகளுக்கு சொந்தக்காரரான நண்பர் பாலமுனை பாறூக் அவர்கள் தொடர்ந்தும் பல பாடல்களை எழுதவேண்டும் என்று வேண்டி, விரும்பி வாழ்த்துகின்றேன் .

அன்புடன்,
கோவிலூர் செல்வராஜன்,
இலண்டன். ஐக்கிய ராஜ்ஜியம்.

♦ ♦ ♦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவேந்தல் பாடல்கள்

## பாடலாம் வாங்க!

கவிதைகள் ,நவீன காவியங்கள்,குறும்பாக்கள், வலைப் பூக்கள், என்று எழுதிவந்த எனது, இன்னுமொரு படைப்பாக ,"பாவேந்தல் பாடல்கள்" வெளிவருகின்றது.இது எனது சுய ஆக்கங்களிலான பத்தாவது நூல்.

இவற்றோடு, எனது 50 வருட கால இலக்கியப் பயணத்தை அடையாளப் படுத்தி பொன்விழாக் குழு வெளியிட்ட "பாவேந்தல் பொன்னேடு," இணைத் தொகுப்பாசிரியராக நான் செயற்பட்ட ,இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் "எழுவான் கதிர்கள்" நூல் என்பனவும் உள்ளன.

எனினும்,எனது ஐம்பது வருட கால இலக்கியப் பயணத்தில் நான் கொண்டுவந்த நூல்கள் எண்ணிக்கை அளவில் போதுமானதல்ல என்ற எண்ணம் எனக்குள் இருக்கின்ற போதிலும், வெளியிட்ட நூல்களுக்குக் கிடைத்த வரவேற்பு எனக்குத் திருப்தியைத் தருகின்றது. வித்தியாசமான வெவ்வேறு தளங்களில் எனது படைப்புகள் விரிந்திருக்கின்றன. இப்போது, உங்கள் கரங்களில் தவழ்கின்ற "பாவேந்தல் பாடல்கள்", மெல்லிசைப் பாடல்களின் தொகுப்பு.

இத்தொகுப்பில் 54 இன்னிசை - மெல்லிசைப் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. கொரோணா காலத்தின் பிற்பகுதியில் வீட்டில் அடங்கியிருந்த காலத்தில் தான் எனது புதிய இசைப்பாடல் எழுதும் முயற்சி தொடங்கியது.

முக நூலில் நானெழுதிய "இருளும் மறைந்து"என்று தொடங்கும் கொரோணா விழிப்புணர்வு வரிகளை இனிமையாகப் பாடி, காணொளியாக்கி அனுப்பித் தந்தவர் கலைஞர் கோவிலூர் செல்வராஜன் அவர்கள் தான். இப்பொழுதும் எனது வரிகளைத் தொடர்ந்து பாடி, காணொளியாக்கித் தரும் அவர், இந்நூலில் வாழ்த்துரையையும் வழங்கி இருக்கின்றார். கலைஞர் கோவிலூர் செல்வராஜன் அவர்களுக்கு எனது இதய பூர்வமான நன்றி.

"பாவேந்தல் பாடல்கள்" தொகுதியை வாசித்து அதுபற்றிய காத்திரமான குறிப்புகளை வழங்கி இருக்கின்ற பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் அவர்களுக்கும்,பேராசிரியர் செ.யோகராசா அவர்களுக்கும் உளங்கனிந்த நன்றிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டை வடிவமைப்பைச் செய்து பின்னட்டைக் குறிப்பையும் வழங்கிய எழுகவி அவர்களுக்கும்,நூலை வெளியீடு செய்த பர்ஹாத் வெளியீட்டகத்திற்கும் மனப்பூர்வமான நன்றிகள்.

வாசக நண்பர்களுக்காக இன்னுமொரு குறிப்பைச் சொல்ல வேண்டும். இந்தத் தொகுதியிலுள்ள அனைத்துப் பாடல்களும் அதன் கீழே குறிப்பிடப்பட்ட திகதிகளில் எழுதிப் பாடப்பட்டவை. அத் திகதிகளில் எனது முக நூல் பக்கத்தில் அவை பதிவு செய்யப்பட்டுமுள்ளன. எழுத்து வடிவிலான இந்தப் பாடல்களை காணொளியாக முகநூலிலும் நீங்கள் பார்க்கலாம். இவற்றை, ஒலிப்பேழையில் கொண்டு வரும் எண்ணமும் உண்டு.

பாடும் திறமை வாய்த்தவர்கள் இப்பாடல்களை இன்னுமொரு மெட்டில், இராகங்களில், தனித்தோ ஆண்,பெண்ணாகவோ குழுவாகவோ இசையமைத்துப் பாடிப் பார்க்கலாம். அவ்வாறு,பாடும் பாடல்களை புலனம் வழியாக **(077-5367712)** அனுப்பித் தந்தால்,புதிய குரல்களையும் ஒலிப்பேழையாகக் கொண்டு வரலாம்.

இலங்கையில், எழுபதுகளில் ஈழத்துப் பாடல்களாகத் தோற்றம் பெற்று,மெல்லிசைப் பாடல்களாக வரவேற்புப் பெற்ற இலங்கைப் பாடல்கள் எண்பதுகள் வரை இலங்கை வானொலியில் பூத்துக் குலுங்கின. இப்பொழுதெல்லாம் அதன் வாய்ப்புகள் அடைபட்டு, முயற்சிகள் தடை பட்டுப் போயுள்ளன.

இவ்வாறான நிலைமையில், எனது பாவேந்தல் பாடல்கள் இசைப் பாடல் தொகுதி இப்போது வெளி வருகின்றது. இலங்கை மெல்லிசைப் பாடல் - இன்னிசைப் பாடல் மரபில் ஒரு புதிய விசையை,ஒரு திருப்பு முனையை ஏற்படுத்த இத்தொகுதி துணை புரியுமென்று நம்புகின்றேன்.

உங்கள் அன்பும் ஆதரவும் இந் நூலுக்கும் கிடைக்குமென்ற நம்பிக்கை எனக்கு என்றும் உண்டு. இனி, பாவேந்தல் பாடல்களோடு சங்கமியுங்கள்.

நன்றி.

அன்புடன்,
பாலமுனை பாறூக்
**2022-10-01.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்கள்


01. இறைவா எங்கள் இறைவா!
02. கண்மணியே நாயகமே!
03. பாலமுனைத் தாய்....
04. அன்னைக் கிங்கே தினமென்றார்கள்....
05. கண்ணின்மணியே! கருணைக் கடலே
06. அழகான வாழ்க்கை யொன்றை அமைத்து வாழணும்!
07. மனித நேயம் மலர்கவே!
08. கவலை விடு! எழுந்து விடு!
09. வாசிக்க வேண்டும் நாம்!
10. தம்பிக்கு ஒரு பாட்டு
11. இறைவா உன்னை வேண்டுகிறோம்
12. அமைதி வேண்டும் மனசிலே
13. வெற்றி மாலை சூடவா
14. எவர்தான் இருக்க வந்தவரோ?
15. இல்லத்தில் நாமிருப்போம்!..
16. இருளும் மறைந்து..
17. கொரோனாவே பெருந் தொற்றே!
18. எப்போது முடியுமிந்தச் சோதனை
19. உத்தமராய் வாழ்ந்தவரை..
20. அருள் வாக்கியே அப்துல் காதிரே
21. பிரார்த்தனையில் உருகி..உருகி
22. அன்னை அழுகின்றாள்!
23. நாடு ..நம்ம நாடு...!
24. அன்னை தேசம் வீழாது!
25. எப்படித்தான் சொல்லுறது கக்கிசத்த..?
26. மக்கள் சக்தி எழுந்தது!
27. என்ன நடக்குது நாட்டிலே!
28. யார் யார் வருவார்..?
29. நாளை நமக்கும் மூப்பு வரும்
30. சிறுவர் நலன்கள் காத்திடுவோம்.!
31. மதுவினைக் குடித்து
32. வாழ்க்கை என்பது நிரந்தரமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. வானக் கூரை பூமித் தட்டு..
34. விரும்பிய வாழ்க்கை.
35. என்ன. பதில் நான் சொல்வேன்
35. நாயனின் நாட்டமின்றி...
37. அல்லாஹ்..யா அல்லாஹ்
38. பொழுதென்றும் நமக்கென்றே விடிகின்றது..!
39. மனசு தானே வாழ்க்கை நண்பா!
40. தொழுதே நாம் கையேந்தி..
41. கல்பு உருகி வடியுதம்மா..
42. ஏந்தலரே அண்ணலரே!
43. மகனே உன் வரவாலே...
44. இப்பொழுது நினைத்தாலே
45. பாடுகிறோம் உங்கள் புகழ் யாரசூலுல்லாஹ்
46. உலகாளும் நாயனே..!
47. இனிய நல் மார்க்க நெறியினில் வாழும்...
48. இதயத்தில் வாழும் இனிய மகனே!
49. நாயனே உன்னை மறந்திருந்தேன்!
50. ஷவ்வாலின் பிறை வானில்
51. முஹர்ரம் பிறந்தாச்சு-
52. பெருநாள் ஹஜ் பெருநாள்..!
53. வல்ல நாயனைப் பிரார்த்தனை புரிந்தால்..
54. ஸலவாத் சொல்கிறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *01. இறைவா எங்கள் இறைவா!*

*இறைவா எங்கள் இறைவா*
*அருள்வாய் நன்மை தருவாய்*

*இறைவா*

*சிறுமைக் குணங்கள் அகன்று விட*
*பொறுமை ஈகை மலர்ந்து வர*
*வறுமை நீங்கி செழிப்பு வர*
*அருள்வாய் நன்மை தருவாய்!*

*இறைவா*

*தாழ்வு நிலைகள் மறைந்து விட*
*தளரா உறுதி நெஞ்சில் வர*
*பாழும் துவேசம் ஒழிந்து விட*
*பண்பில் உயர்ந்து சிறந்து விட*

*இறைவா*

*வாழ்வில் வசந்தம் வீசி வர*
*வாய்ப்பு வசதி பெருகி வர*
*நலன்கள் யாவும் பெற்றுவிட*
*நலமாய் நாங்கள் வாழ்ந்து வர*

*இறைவா*

*துன்பம் மறைந்து இன்பம் வர*
*துயர நோய்கள் ஒழிந்து விட*
*அன்பில் நாங்கள் கூடி வர*
*அகங்கள் மலர்ந்து வாழ்ந்து வர*

*இறைவா*

***05-08-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. கண்மணியே நாயகமே!

கண்மணியே நாயகமே கண்ணியத்தின் திருஉருவே
உங்கள் சொல் செயல்களினைப் பார்க்கிறேன்
ஒவ்வொன்றாய்ப் படித்துப் படித்து வியக்கிறேன்

உலகத்தில் பூத்திருந்த
உத்தமர்கள் வரிசையிலே
முதலிடத்தைப் பெற்றிருந்த
முத்தான முஹம்மதரே

உங்கள் சொல்

நன்மைவழி சொன்னவரே
சொன்னதையே செய்தவரே
வள்ளல் நபி நாயகமே
வழிகாட்டும் பேரருளே
உங்கள் சொல்

ஆன்மீகத் தீன் சுடரே
அறிவு நிறைப் பொக்கிஷமே
நேர்மை மிகு அல் அமீனே
நீதிநெறிப் போதகரே

உங்கள் சொல் செயல்களினைப் படிக்கிறேன்
ஒவ்வொன்றாய்ப் படித்து படித்து சிறக்கிறேன்.

அரசியலா மெய்யியலா
அறிவியலா அழகியலா
பொருளியலா உளவியலா
தெளிவூட்டிப் புதுமை செய்த நாதரே-
எங்கள்
திருநபியே குளிர்நிலவே, தென்றலே!

உங்கள் சொல் செயல்களினைப் படிக்கிறேன்
ஒவ்வொன்றாய்ப் படித்து படித்து சிறக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதவைக்கு வாழ்வளித்த வேந்தலரே நபிமணியே
அடிமைகளை
உரிமை இட்ட அண்ணலே
எங்கள்
நபிமணியே முஹம்மதரே நாதரே!
இல்லறத்தை நல்லறமாய்
அமைத்து விட வழி காட்டி
தடைகள் பல உடைத்தெறிந்த
தூதரே!
தூயவழிக் காவலரே நேசரே!

கண்மணியே நாயகமே
கண்ணியத்தின் திரு உருவே
உங்கள் சொல் செயல்களினைப் படிக்கிறேன்
ஒவ்வொன்றாய்ப் படித்துப் படித்து சிறக்கிறேன்

***22-06-2022***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *03. பாலமுனைத் தாய்....*

*உன்னைநான் என்றென்றும் மறவேனம்மா-என்*
*உணர்வோடு கலந்திட்ட உயிர் நீயம்மா*
*மண்ணேதான் ஆனாலும் மடி நீயம்மா*
*உன்னைநான் ஒருபோதும் மறவேனம்மா!*

*பால்பொங்கி வளம்பெற்ற தாய் நீயம்மா*
*பாலமுனைப் பெயர்பெற்ற பதி நீயம்மா*

*வயல் வளமும் கடல் வளமும் நீ பெற்றவள்*
*வனப்போடு இயற்கை வளம்*
*தான் பெற்றவள்*
*அன்பான மக்களினை நீ பெற்றவள்*
*வந்தாரை வரவேற்று மலர்வுற்றவள்*
*உன்னை*

*பால்பொங்கி வளம்பெற்ற தாய் நீயம்மா*
*பாலமுனைப் பெயர்பெற்ற பதி நீயம்மா!*

*உன்னைநான் ஒருபோதும் மறவேனம்மா*
*மண்ணே நீ ஆனாலும் என் மடி நீயம்மா*

*கல்புகளில் குர்ஆனைச் சுமந்திட்டவர்*
*கற்றதனால் இனபேதம் களைந்திட்டவர்*
*கலாசாரம் பண்பாட்டில் மிளிர் கின்றவர்*
*உன்மக்கள் தாயே நீ உயர்ந்திட்டவள்*

*உன்னைநான் ஒருபோதும் மறவேனம்மா-என்*
*உணர்வோடு கலந்திட்ட உயிர் நீயம்மா!*

*பால்பொங்கி வளம்பெற்ற தாய் நீயம்மா*
*பாலமுனைப் பெயர்பெற்ற பதி நீயம்மா!*
*உன்னை*

***12-06-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. அன்னைக் கிங்கே தினமென்றார்கள்....

அன்னைக் கிங்கே தினமென்றார்கள்
அழுகை வருகிறது.
உன்னை நினைக்க ஒருதினம் தானா
உள்ளம் அழுகிறது!

தன்னில் கருவைச் சுமந்தே இந்த
மண்ணுக் களிப்பவளே!
சின்னஞ் சிறிய குழந்தையி லிருந்து
சீராய் வளர்ப்பவளே
உன்னை உணர்வை உடலை யெல்லாம்
பிள்ளைக் களிப்பவளே!

உன்னை நினைக்க ஒருதினமாமே
உள்ளம் அழுகிறது! அன்னை

கண்ணின் இமையாய் காத்தவள் நீதான்.
கருணைக் கடலம்மா!
மண்ணில் உயர்ந்த படைப்பும் நீதான்
மகத்துவம் நீயம்மா!
அன்பைப் பொழியும் அற்புத வானம்
அன்னை நீயம்மா

உன்னை நினைக்க ஒரு தினமாமே
உள்ளம் அழுகிறது! அன்னை

தாயே உனக்கோர் நாளு மெதற்கு
நாமுமை மறவோமே!
நீயிலை யென்றால் நாமிலை இங்கே
நீயெம் சுவனபதி
தாயே உன்றன் காலின் கீழ் தான்
சொர்க்கம் என்றெங்கள்
நாயகம் சொன்னார் நாமுமை மறவோம்
நெஞ்சில் நீயிருப்பாய்! அன்னை

*15-08-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. கண்ணின்மணியே! கருணைக் கடலே!

கண்ணின் மணியே கருணைக் கடலே!
அன்பின் உருவே அழுகிறோம்
உங்கள் கரங்கள் பற்றி நடந்தோம்
எங்கள் வாப்பா அழுகிறோம்

கண்ணின்

கண்ணின் இமை போல் காத்தவர் நீங்கள்
கவலை போக்கி வளர்த்தவர் நீங்கள்
தோளில் தூக்கி உலகம் காட்டி
நாலும் தெரிய வைத்தவர் நீங்கள்!

கண்ணின்

"கல்பி"ல் உங்கள் உருவம் பதித்தோம்
சொல்லில் உங்கள் கனிவை மதித்தோம்
எல்லை இல்லா இன்பம் சுவைத்தோம்
இல்லை நீங்கள் எங்கள் வாப்பா
இன்றும் நாங்கள் அழுகிறோம்!

பயிற்சிக் கூடமாய் அமைந்தவர் நீங்கள்
பன்முக ஆற்றலை வளர்த்தவர் நீங்கள்
முழுமதியாகத் திகழ்ந்தவர் நீங்கள்
முன்மாதிரியாக நடந்தவர் நீங்கள்!

கண்ணின்

*20-06-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. அழகான வாழ்க்கை யொன்றை அமைத்து வாழணும்!

அழகான வாழ்க்கை யொன்றை அமைத்து வாழணும்
அடுத்தவன் போல் எதுக்கு நாங்க வாழ நினைக்கணும்
யாருக்காக நம்மை நாமே இழந்து வாழணும்
பேருக்காகப் பெருமைக்காக ஏன்தான் வாழணும்

அழகான

போலியான வாழ்வுக்குள்ளே ஏன்தான் தொலையணும்
புகழ்ச்சிக்காக வேசம் போட்டு ஏன்நாம் அலையணும்
ஆள் பிடித்து வால்பிடித்து
அலைதல் விட்டுமே
அமைதியான வாழ்வை நாங்க
அமைத்து வாழணும்!

அழகான

நேர்மை யான மனித னாக
நிமிர்ந்து வாழணும்
நீதி நெறி தெரிந்து கொண்டு
சிறந்து வாழணும்
யார்மீதும் பகைமை இல்லை
என்று வாழணும்
யாருக்கும் அச்ச மில்லை என்றும் வாழணும்!

நம்வாழ்வில் ஒளிவீசும் என்று நம்பணும்
நம்பிக்கை உடைய வராய் நாங்க முயலணும்
அன்போடு உறவாடி மகிழ்ந்து பேசணும்
அமைதியான வாழ்வை நாங்க அமைத்து வாழணும்!

அழகான

**24-08-2021**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 07. மனித நேயம் மலர்கவே!

*(ஆகஸ்ட் 19*
*உலக மனித நேய நாள்)*

*மனித நேயம் மலர்கவே!*
*இனிமை எங்கும் படர்கவே!*
*அன்பு கருணை வளர்கவே!*
*ஆன்ம பலமும் சேர்கவே!*

*மனிதப் பண்பு நிறைந்து நிறைந்து*
*மண்ணில் பகைமை மறைந்து மறைந்து*
*இனங்கள் இணைந்து*
*இதயம் குளிர்ந்து*
*முரண்கள் தவிர்த்தே வாழுவோம்*
*மனித நேயம் மலர்கவே*
*இனிமை எங்கும் படர்கவே!*

*சற்குணங்கள் வளர்ந்து வளர்ந்து*
*சாத்வீகம் மிளிர்ந்து மிளிர்ந்து*
*உள்ளம் மலர்ந்து*
*உறவில் சிறந்து*
*இன்ப மாக வாழுவோம்*
*மனித நேயம் மலர்கவே!*
*இனிமை எங்கும் படர்கவே*

*வேதவிளக்கம் அறிந்து அறிந்து*
*போதனைகள் புரிந்து புரிந்து*
*உண்மை உணர்ந்து*
*புன்மை தவிர்த்து*
*நன்மை செய்தே வாழுவோம்!*
*மனித நேயம் மலர்கவே*
*இனிமை எங்கும் படர்கவே*

***19-08-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 08. கவலை விடு! எழுந்து விடு!

கவலை விடுநீ எழுந்துவிடு
காலம் கனியும், மகிழ்ந்து விடு
துணிந்து விடு துயரம் விடு
துன்பம் போக்கி வாழ்ந்துவிடு!

உறுதி இழந்து வாடாதே
உள்ளம் சோர்ந்து போகாதே
இரவும் பகலும் மாறி வரும்
இருளும் கழிய, ஒளி பரவும்!

கவலை

எண்ணம் போல்தான் வாழ்வமையும்
எதிலும் வெற்றி கை கூடும்
தன்னம்பிக்கை உரம் சேர்க்கும்
தளர்ந்தே போனால் சோர்வு வரும்!

கவலை

எல்லாம் மாறும், இதுவும் மாறும்
பொல்லாப் பெல்லாம் நீங்கி விடும்
அல்லாஹ் அருள்வான் நோய் தீரும்
தொல்லை நீங்கும் , துவளாதே!

கவலை

மனதின் சுமைகள் இறக்கிவிடு
உணர்வில் இளமை ஏந்தியெடு
துணிவாய் நடநீ, முன்னேறு,
தூயோன் அருள்வான், துவளாதே!

கவலை

*21-08-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 09. வாசிக்க வேண்டும் நாம்!

*(ஏப்ரல் 23 உலக புத்தக வாசிப்பு தினம்)*

வாசிக்க வேண்டும் நாம்
வளமாக்கும் அது நம்மை
வா..வா என் உயிர் நண்பனே
வாசிப்போம் வா நண்பனே
வாசிப்பை நேசிப்போம்
வாசிப்பை சுவாசிப்போம்
வா வா என் உயிர் நண்பனே

கற்பனைகள் அதிகரிக்கும்
திட்டங்கள் செழுமை பெறும்
உற்சாகம் பிறந்து விடும் நண்பனே
உயர்ச்சி வரும் நிச்சயமாய் நண்பனே!

புத்தியினைத் தீட்டாது
புத்துணர்ச்சி கிடையாது
அற்புதங்கள் அறியாது
அகவெளிச்சம் ஒளிராது
இற்றைப் படுத்தாது
எத்துறையும் ஜொலிக்காது
இத்தனையும் வாசிப்பு
இல்லாமல் நிகழாது

வாசிக்க

புத்தகங்கள் வாசிக்கப்
புதுப்பொலிவு வந்து விடும்!
எண்ணங்கள் எழுச்சி பெறும் நண்பனே!
எம்மனதில் தெம்பு வரும் நண்பனே!

வாசிக்க

*14-09-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. தம்பிக்கு ஒரு பாட்டு

தம்பிக்கு ஒரு பாட்டு - அன்புத்
தம்பிக்கு ஒரு பாட்டு
தும்பி போல பறந்து திரியும்
தம்பிக்கு ஒரு பாட்டு!

துள்ளித் திரியும் செல்லத் தம்பி
அள்ளி அணைத்துப் பாடுகிறேன்
தும்பி போலப் பறந்து திரியும்
தம்பி உன்னைப் பாடுகிறேன்.

எங்கள் தங்கம் இளைய சிங்கம்
அன்புத் தம்பி பாடுகிறேன்
உன்னை யெண்ணி உலகம் இருக்கு
உறவில் தானே பாடுகிறேன்
தம்பிக்கு

நாளை உலகம் உனது கையில்
நம்பி உன்னைப் பாடுகிறேன்
நாலும் தெரிந்து தேர்ச்சி பெற்று
வாழ்வில் உயர வேண்டுகிறேன்
தம்பிக்கு

ஆளும் வளர்ந்து அறிவு வளர்ந்து
ஆற்றல் பெருகப் பாடுகிறேன்
வாழும் வாழ்வில் மலர்ச்சி விரிய
வாழ்த்தி இங்கே பாடுகிறேன்!
தம்பிக்கு

நேர்மை யான பாதை தேர்ந்து
நிமிர்ந்து நடக்கப் பாடுகிறேன்
நேசத் தம்பி, செல்லத் தம்பி
நெஞ்சம் மகிழ்ந்து வாழ்த்துகிறேன்!
தம்பிக்கு

*05-09-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *11. இறைவா உன்னை வேண்டுகிறோம்*

*இறைவா உன்னை வேண்டுகிறோம்*
*எம்சிரந் தாழ்த்தித் துதிக்கின்றோம்*
*கருணை புரிவாய் இறையோனே*
*கவலை தீர்த்து அருள்புரிவாய்!* *இறைவா*

*மறைவான வற்றை அறிபவனே*
*மன்னித் தருளும் றஹ்மானே!*
*குறைக ளகற்றும் நாயகனே*
*இருகை ஏந்திக் கேட்கின்றோம்!* *இறைவா*

*உலகம் இயங்கும் உன்னாலே*
*உன்துணை யின்றி எது அசையும்?*
*எதுதான் முடியும் நீயல்லால்*
*இறைவா தொழுது பணிகின்றோம்!* *இறைவா*

*மலையைக் கடலைத் தந்தவனே!*
*மழையை வெயிலைத் தருபவனே!*
*வளங்க ளெல்லாம் வழங்குகிற*
*வல்ல இறைவா வணங்குகிறோம்!* *இறைவா*

*வளங்க ளாலும் சோதிக்கும்*
*வல்லமை பெற்ற பேரிறையே*
*நிதமும் உன்னைத் தொழுகின்றோம்*
*நீயே அருள்வாய் யா றப்பு!* *இறைவா*

*வளியைப் புயலாய் மாற்றாதே*
*கடலைப் பொங்கச் செய்யாதே*
*மழையைக் கொண்டு அழிக்காதே!*
*மா பெரியோனே மன்னிப்பாய்!* *இறைவா*

***29-11-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. அமைதி வேண்டும் மனசிலே

அமைதி வேண்டும் மனசிலே
அகந்தை யழிந்து போகணும்
நிதமும் இறையைத் தொழுது கொண்டு
நிம்மதி யாக வாழணும்
அமைதி

தன்னை உயர்த்திப்
பிறரைத் தாழ்த்தும்
தன்மை விட்டுப் போகணும்
அன்பில் தோய்ந்து
அணைத்து மகிழும்
அழகு வாழ்க்கை அமையணும்!
அமைதி

பிறரை நாடிப்
பின்கத வோடிப்
பெருமை தேடல் ஒழியணும்
பொருளே இல்லாப்
போலி வாழ்வின்
மோகம் விட்டுப் போகணும்!
அமைதி

கனிவு கொண்ட
இனிய வாழ்வை
விரும்பி மனசு ஏற்கணும்
புனித மான
நட்பி லென்றும்
பூத்துக் குலுங்கி வாழணும்!
அமைதி

*19-11-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *13. வெற்றி மாலை சூடவா!*

*வெற்றி மாலை சூட வா!*
*விரைந்து வா எழுந்து வா*
*முயற்சி என்றும் தோற்ற தில்லையே*
*முயன்று பார் தொடர்ந்து செல்*
*தோழனே தொடர்ந்து செல்*
*தோல்வி ஒருநாள் தோற்றுப் போகுமே!* வெற்றி

*இளங்கதிரே எங்கள் இனியவனே*
*இதயமெலாம் அன்பு நிறைந்தவனே*
*புதுஉலகைக் காண விழைபவனே*
*புறப்படு தோழா துணிவுடனே!* வெற்றி

*மனதினில் பயத்தை அகற்றி விடு*
*மடமை இருள்கள் நீக்கி விடு*
*இனியொரு விதிசெய்யத் தயங்காதே*
*இயலா தென்றே இயம்பாதே* வெற்றி

*எட்டும் தூரம் முன்னாலே*
*எழுந்து நடநீ முன்னேறு*
*உச்சம் தொடலாம் சோராதே*
*உறுதி கொண்டு முன்னேறு!* வெற்றி

*தன்னம் பிக்கை உள்ளவரை*
*தடைக ளெல்லாம் உடைந்து விடும்*
*உன்னை நம்பு உறுதி யெடு*
*உலகம் உனதே வெற்றி பெறு!* வெற்றி

***24-05-2022***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. எவர்தான் இருக்க வந்தவரோ?

எவர்தான் இருக்க வந்தவரோ?
சொல்
எதுதான் இங்கு நிரந்தரமோ?
இறைவன் கொடுத்து சிறு பொழுது
இதற்குள்ளே தான் வாழ்க்கையடா..
ஒருநாள் மரணம் அதையெண்ணி
ஒவ்வொரு நாளும் சாவதுவா?

எவர்தான்

மணிமுடி தரித்து வாழ்ந்தவரும்
மறைந்தே போனார் மண்ணறையுள்
பிணி மூப்பென்று சில பேர்கள்
பிரிந்தே
போனார் உண்மையடா

எவர்தான்

இரவில் துயின்று எழும்பாமல்
இருந்தால் மரணம் ,போய்விடுவோம்
பெருமைப் பேச்சு பேதங்கள்
பிணக்கு நமக்கேன் இதற்குள்ளே

இருக்கும் வரையில் சுகமாக
இருக்கத் தகுந்த வழிநடந்து
மரண அச்ச மற்றவராய்
மகிழ்ந்து வாழ்தல் இன்பமடா

எவர்தான்

*14-08-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. இல்லத்தில் நாமிருப்போம்!..

*(கொரோணா விழிப்புணர்வுப் பாடல்)*

இல்லத்தில் நாமிருப்போம்- கொரோணா
தொல்லையை அகற்றிடுவோம்

கொரோணா வைரஸ்
கொடுமை ஒழிய
விழிப்பாய் நாமிருப்போம்

இல்லத்தில்

வெளியில் வீணே சுற்றல் விட்டு
வீட்டில் அடங்கிடுவோம்!
உலகமெல்லாம் சுடுகா டாச்சு
உணர்ந்து நடந்திடுவோம்

இல்லத்தில்

புனிதம் பேணி தூரம் பேணி
சிலநாள் தனித்திடுவோம்
நிதமும் இறையைத் தொழுது கொண்டே
குறைகள் முறையிடுவோம்

இல்லத்தில்

இயல்பு வாழ்க்கை எம்மை நாடும்
இறைவன் அருள் புரிவான்
புரிந்து வாழ்ந்து பொறுமை காத்தால்
வாழ்வு நலம் பெறுமே!

இல்லத்தில்

***24-05-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. இருளும் மறைந்து..

*(கொரோணா விழிப்புணர்வுப் பாடல்)*

இருளும் மறைந்து இரவு விடிய
புதிய காலை புலர்ந்ததே
குறைகள் அகன்று கொரோணா மறைந்தால்
நிறையும் மனதில் இன்பமே!
கொரோணா போய்விடு
கொரோணா போய் விடு
கொரோணா போய் விடு. இருளும்

நெஞ்சில் உறுதி எங்கும் தூய்மை
நோய்கள் நீக்கும் உண்மையே
இன்பம் வாழ்வில் பொங்கி வரவே
சுத்தம் பேணல் நன்மையே! இருளும்

புனிதம் அன்பு பூக்கும் நெஞ்சில்
மறைந்து போகும் துன்பமே
மனதின் கறைகள் குறைகள் அகல
மலரும் மகிழ்ச்சி இன்பமே இருளும்

இன்னும் கவனம் எடுத்துக் கொண்டால்
எங்கள் மகிழ்ச்சி தொடருமே
இல்லை யென்றால் எங்கள் வாழ்வில்
இன்பம் என்றும் இடருமே! இருளும்

கட்டுப்பாடு சுயமாய் வேண்டும்
கவனம் கவனம் கவனமே
சட்டம் விட்டுத் தந்த போதும்
அமைதி வாழ்வு சுவனமே! இருளும்

கொரோணா போய் விடு
கொரோணா போய்விடு
கொரோணா போய்விடு!

***12-05-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. கொரோனாவே பெருந் தொற்றே!

கொரோனாவே பெருந்தொற்றே நீ போய் விடு
வெறி கொண்டு திரியாதே நீ போய்விடு

உயிர்கொல்லிப் பேயேநீ எமைவிட்டுப் போ
உருமாறும் கோவிட்டே எமைவிட்டுப் போ
உருமாறி டெல்டாவாய் வதைக்காதே போ
வெறியோடு திரியாதே விட்டோடிப் போ

கொரோனாவே

வெளியேற முடியாது பயம் கூடுதே
வேலைக்கும் செல்லாத நிலை யாகுதே
பசிவந்து நோய்கூடி கண் மூடுதே
பழிவாங்கும் உன்னாலே பிணம் கூடுதே!

கொரோனாவே

நாளொன்றில் பல்வேறு பிணி சேருதே
வாழ்விங்கு தடுமாறித் தான் போகுதே
ஊரெல்லாம் ஒப்பாரி தினம் கேட்குதே
உறைந்திட்ட பனியாகி உயிர் போகுதே

கொரோனாவே

தடுப்பூசி போட்டுள்ளோம் நீ போய்விடு
தனித்தேதான் இருக்கின்றோம் நீ போய்விடு
படுத்தாதே பாடெம்மை நீ போய்விடு
பலிகொண்டாய் பலபேரை இனிப் போய் விடு!

கொரனாவே

***09-08-2021***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. எப்போது முடியுமிந்தச் சோதனை

எப்போது முடியு மிந்தச் சோதனை
இறைவா
இனியும் தாங்க முடிய வில்லை வேதனை

தப்புக்கள் புரிந்து விட்டோம்
தவறுகளும் இழைத்து விட்டோம்
இப்போது அழுகின்றோம் ஏகனே
எம்பிழைகள் பொறுத்தருள்வாய் நாயனே!

எப்போது

ஆண்டவனே உன்னிடத்தில்
அழுது புலம்பு கின்றோம்
உன்னை விட்டால் யாருமில்லை நாயனே
உன்சோதனைகள் நிறுத்திவிடு ஏகனே!

எப்போது

உன்னை மறந்தி ருந்தோம்
உணராமல் நாம் நடந்தோம்
இன்று வருந்து கின்றோம் ஏகனே!
எதைக் கொண்டும் சோதிப்பாய்
என்று அறிந் திருந்தும்
நிதம் உன்னை நினைக்கவில்லை நாயனே!

எப்போது

மன்னிப்பாய் எங்களினை மாபெரிய வல்லவனே!
மனமிரங்கிக காத்தருள்வாய் மன்னவனே நல்லவனே
கையறுந்த நிலையில் நாம்
கலங்குகிறோம், உன்னுதவி
இல்லாது வருந்துகிறோம்

எப்போது

*07-09-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *19. உத்தமராய் வாழ்ந்தவரை..*

*(ஜூன் 11 அறிஞர் சித்தி லெவ்வை அவர்களின் பிறந்த நாள்)*

*உத்தமராய் வாழ்ந்தவரை உலகம் மறக்குமா?*
*அவர்*
*உன்னதப் பணிகளினை மறக்க முடியுமா?*
*சிந்தனைப் புரட்சி செய்த செம்ம லல்லவா?*
*சித்தி லெவ்வை என்பதவர் நாம மல்லவா?*

*உத்தமராய்*

*சித்தி லெவ்வை என்பதவர் நாம மல்லவா*
*சிந்தனைப் புரட்சி செய்த செம்ம லல்லவா*
*முத்திரை பதித்த வரெம் முத்து அல்லவா?*
*முஸ்லிம்கள் நேசரவர் ,எம்சொத்து அல்லவா?*

*கல்விக் கூடம் ஸாஹிறாவை தந்தவ ரன்றோ?*
*கலைக்கூடம் ஹைரியாவின் தாபக ரன்றோ?*

*உத்தம*

*மறுமலர்ச்சி தந்தையாக திகழ்ந்தவ ரன்றோ?*
*மார்க்க மேதையாகவும் தான் ஜொலித்தவ ரன்றோ?*
*அரசியலில் முன்னோடி தலைவ ரல்லவா?*
*ஆள்புலமை கொண்டிருந்த அறிஞ ரல்லவா?*

*எழுத்து ,நாவல் என்பவற்றின் முதல்வ ரல்லவா?*
*எங்கள்*
*இருப்பு பற்றி சிந்தித்த மேதை யல்லவா?*

*உத்தம*

***15-06-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20. அருள் வாக்கியே அப்துல் காதிரே

*(ஆகஸ்ட் 30 அருள்வாக்கி ,அட்டவதானி அப்துல் காதர் அவர்களின் பிறந்த தினம்)*

*அருள் வாக்கியே அப்துல் காதிரே*
*திருப் புகழ்பாடிப் புகழ்சேர்த்த*
*மெய்ஞ் ஞானியே!*

*வெண்பா வினால் விளக்*
*கேற்றியே*
*விந்தைகள் தான் செய்த இறை நேசரே!*

*அருள்*

*எரியென்றே நீபாடித் திரி ஏற்றினாய்*
*அரியணையில் அணையென்றே ஒளி போக்கினாய்*
*சிறுவயதில் போட்டிகளில் திறன் காட்டினாய்*
*யாழ்ப்பாணச் சங்கனென்றும் பெய ரீட்டினாய்*

*அருள்*

*போப்பிட்டி மண்ணீன்ற புகழ் மைந்தனே*
*யாப்போதிப் பாதந்த பாமன்னனே*
*திருப்பத்தூர் பூர்வீகத் திரு வாளனே*
*அருள் பெற்ற ஆத்மீகக் கவிஜோதியே*

*அருள்*

*பட்டங்கள் பலபெற்ற மா மேதையே*
*முப்பது நூல் ஈந்த பேராளனே*
*அற்புதப் படைப்பாளி அப்துல் காதிரே*
*அட்டவ தானியே வித்துவத் தீபமே!*

*அருள்*

*27-08-2021*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21. பிரார்த்தனையில் உருகி..உருகி

(ஒக்டோபர் 23, முஸ்லிம் அரசியலின் முன்னோடி,மாமனிதர் எம்.எச்.எம். அஷ்ரப் பிறந்த தினம்)

பிரார்த்தனையில் உருகி உருகி கேட்கிறோம்
மறுமை வாழ்வில் மலர்ந்து மகிழ வேண்டினோம்

இரு கரங்கள் ஏந்தி ஏந்தி
இறைவ னிடத்தில் இரந்து இரந்து -( நீங்கள்)
பிறந்த நாளில் உங்களுக்காய் வேண்டினோம்
திரண்டு வந்து தொழுது தொழுது கேட்கிறோம்!

அவனியிலே நீங்கள் செய்த
அமல்கள் அங்கு நிறைய வேண்டும்
சுவனபதியில் நீங்கள் அங்கு
சுகந்தம் வீச வாழ வேண்டும்! பிரார்த்தனை

சிறு பான்மை மக்களுக்குச்
சிறந்த தொரு தலை வராகி
முஸ் லிம் சமூகத் தின்
முழக்கமாகி, அமைச்சராகி
அஷ்ரப் நீங்கள் அரும்பணிகள்
புரிந்தவர்- மக்கள்
குறையகற்றி
மனங்குளிரச் செய்தவர் பிரார்த்தனை

துறை முகங்கள் தொழில் வாய்ப்பு
நிறை வான கல்வி வளம்
தருவதிலே முன்னின்று உழைத்தவர்- எங்கள்
தலைவரென அரசியலில் ஜொலித்தவர் பிரார்த்தனை

மாறாத அன்போடு
மக்கள் பணி புரிந்தவரே
அஷ்ரபெனும் பெரு மகனே
ஆளுமையே ! ஒளி விளக்கே!
மன்றாடி இறைவனிடம் கேட்கிறோம்
மறுமையிலே நலம் வாழ வேண்டினோம் பிரார்த்தனை

27-10-2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. அன்னை அழுகின்றாள்!

அன்னை அழு கின்றாள்-எங்கள்
அன்னை அழுகின்றாள்

கண்ணீர் சிந்தி கவலைப் பட்டு
அன்னை அழுகின்றாள் - இலங்கை
அன்னை அழுகின்றாள்!

கண்ணிய மில்லாக் கயவர்க ளாலே
தன்னிலை இழந்து தனித்து வருந்தி
அன்னை அழுகின்றாள்!

அன்னை

வயலும் கடலும் வளமும் இருந்து
பெருமை பெற்ற அருமை அன்னை
தினமும் அழுகின்றாள்!- இன்று
தினமும் அழுகின்றாள்!

அன்னை

பொருளின்றி வாடும்
நிலையென்று மாறும்
வறுமை ஒழியாதா?- இந்த
துயரம் அகலாதா?

அன்னை

அன்னையின் ஏக்கம் என்றுதான் மாறும்
அல்லல்கள் தீராதா?
கள்வர்கள் ஒழிந்து தொல்லைகள் அகன்று
செல்வங்கள் சேராதா?
பிள்ளைகள் சேர்ந்து நல்லதோர் விடிவைக் கண்டிட மாட்டாரா?

அன்னை

*21-05-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23. நாடு ..நம்ம நாடு...!

நாடு.. நம்ம நாடு - இந்த
நாட்டில நம்ம படும் பாடு -ஐயோ
நாளும் வேதன யாரும் கேக்கல
நமக்கு வந்ததே கேடு.

நடுத்தெருவில மக்கள் அலையுறார்
நாடு கலங்குதே பாரு.
நடு இரவிலும் கியூ குறையல
நாட்டு நிலைமையைப் பாரு
எரி பொருளில்ல, எங்கும் கிடைக்கல
எதுவும் ஓடல்ல பாரு
அடுப்பும் எரியல்ல "கேசு"ம் கிடைக்கல
இதுக்கு காரணம் யாரு? நாடு

வறுமை ஆட்டுது வயிறு பத்துது
கொடுமை செய்தவர் யாரு?
அரிசி ,மா விலை,அதையும் காணல
பதுக்கி வைத்தவர் யாரு- இந்தப்
பாவம் செய்தவர் யாரு?
பாலுக் கழுதிடும் பிள்ளை முகத்தினை
பார்க்க முடியல ,பாரு.
பஞ்சம் பசியிலே நாட்டை விட்டவர்
பாவி யானவர் யாரு? நாடு

ஏக்கம் பெருகுது இன்னல் கூடுது
ஏது வழியெனக் கூறு
இருளில் மூழ்குது எங்கள் தேசமே
ஏப்பம் விட்டவர் யாரு?
பெற்றோல் கியூவிலே நிற்கும் மக்களும்
விழுந்து சாகிறார் பாரு
பட்டினிச் சாவுகள், பஞ்சம் தொடருதே
பசியைப் போக்குவார் யாரு? நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24. அன்னை தேசம் வீழாது!

அன்னை தேசம் வீழாது
அவலங்கள் தொடராது
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!
நல்லதம்பி, நல்ல தங்கை
உள்ள நாடு வீழாது
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே! அன்னை

அநீதி என்றும் தொடராது
அசத்தியம் நிலைக்காது
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!
எட்டுத் திக்கும் இருந்து
சேரும்
புத்தி யுள்ள பிள்ளைக ளால்
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே! அன்னை

அதர்மங்கள் அழிந்து போகும்
அகங்காரம் வீழ்ந்து சாகும்
எங்கள் தேசம் வெற்றி கொள்ளுமே
திறமை கல்வி கொண்ட மக்கள்
ஒருமன தாய்ச் சேர்வ தாலே
வறுமை நிலை மறைந்து போகுமே!
எங்கள் தேசம் வெற்றி கொள்ளுமே! அன்னை

இனபேதம் மறைந்து போகும்
மதவாதம் ஒழிந்து சாயும்
எங்கள் தேசம் நிமிர்ந்து கொள்ளுமே!
ஒருதாயின் மக்களென
உணர்ந்து கொண்ட இளைஞர்க ளால்
புதிய தொரு மகிழ்ச்சி தோன்றுமே!
எங்கள் தேசம் மலர்ந்து கொள்ளுமே! அன்னை

*08-05-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25. எப்படித்தான் சொல்லுறது கக்கிசத்த..?

எப்படித்தான் சொல்லுறது கக்கிசத்த
இதச் சொல்லிச் சொல்லி கண்டபலன் ஒண்டுமில்ல

போட்ட போட்ட இடத்திலதான் கிடக்குது
புள்ள குட்டி பசியால வாடுது
கேட்பதற்கு ஆருமில்ல நாட்டில..??
கொல, கொள்ள கூடிக்கித்தான் போகுது...,. எப்படித்தான்,

வீட்டுக்குள்ள சனங்களில்ல அலையுது
விடிய விடிய றோட்டிலதான் கிடக்குது
இல்ல இல்ல என்ற செய்தி கூடுது
எதையும் செய்ய முடியலையாம்.. ஏதோ ..ஆளுது! எப்படித்தான்

பெற்றோலில்ல டீசலில்ல
பிள்ளைக் கிஞ்ச பாலுமில்ல
பாணுமில்ல பருப்புமில்ல
பள்ளிக்கூடப் படிப்பு மில்ல
கேசுமில்ல சமையலில்ல
கேட்கப் பார்க்க ஆருமில்ல எப்படித்தான்

ஆளுக்காள் மாறி மாறிக் குந்துறார்
அப்ப அப்ப சாத்திரங்கள் சொல்லுறார்
கூடிக் கூடி எதை எதையோ பேசுறார்
கொண்டுவந்த தொன்றுமில்ல நாட்டிலே... எப்படித்தான்

*28-06-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26. மக்கள் சக்தி எழுந்தது!

மக்கள் சக்தி எழுந்தது
மமதை சாய்க்கத் துணிந்தது
அக்கிரமம் அழிந்து போனதே
அன்னை தேசம் நிமிர்ந்து கொண்டதே- எங்கள்
அன்னை தேசம் நிமிர்ந்து கொண்டதே!

இனவாதப் பேய்க ளினால்
இருண்டு போன எங்கள் தேசம்
ஒருதாயின் மக்க ளென
ஒன்றிணைந்த இளைஞர் களால்
இருள் போக்கி எழுந்து கொண்டதே!
இன்னலிடர் மறைந்து போகுமே- இனி
இன்னலிடர் மறைந்து போகுமே! மக்கள்

கொள்ளையர்கள் போய் முடிவர்
கொலை வெறியர் தான் மடிவர்
நல்லதொரு தேச மென
நம்மன்னை பெயர் பெறுவாள்
தொல்லையினித் தீர்ந்து போகுமே
துயரங்கள் ஓய்ந்து போகுமே! - இனி
துயரங்கள் ஓய்ந்து போகுமே! மக்கள்

வளம் கொழிக்கும் நாடாகும்
வறிய நிலை ஓடிவிடும்
இலங்கையர்கள் நாங்க ளென
இளைஞர் ஒன்று சேர்வதனால்
புதியதொரு மலர்ச்சி தோன்றுமே!
புதல்வர்களால் மகிழ்ச்சி தோன்றுமே!- இங்கு
புதல்வர்களால் மகிழ்ச்சி தோன்றுமே! மக்கள்

*12-07-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 27. என்ன நடக்குது நாட்டிலே!

என்ன நடக்குது நாட்டிலே
இதைச் சொல்ல முடியுமா பாட்டிலே

பஞ்சம் பெருகுதே பங்கம் விளையுதே
கொஞ்சமும் நிம்மதி இல்லையே- இங்கு
கொடுமைகள் எங்கும் நிறையுதே- ஐயோ
குளமெனக் கண்ணீர் பெருகுதே!

என்ன

பொருளினைத் தேடி நிதமும் அலைச்சலே
பெறவும் முடியல்ல கரச்சலே
ஐயோ
உடல்கள் சோர்ந்து தான் சாயுதே
ஓ.. கியூவில் ஆவி பிரியுதே!

என்ன

பட்டினி பசியினால் சாவுகள்- இங்கு
பாலுக் கழுகிற பிள்ளைகள்
எப்பொழு திந்நிலை மாறுமோ?- எங்கள்
இன்னல்கள் என்றுதான் தீருமோ?

என்ன

மாற்றம் வருமெனச் சொல்கிறார்- மன்றில்
மாறி மாறியே அமர்கிறார்
ஏற்றம் எதுவுமே இல்லையே- எங்கள்
நாட்டு நிலைமை தான்? மாறுமோ?.

என்ன

*04-06-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28. யார் யார் வருவார்..?

யார் யார் வருவார்
யார்யார் போவார்
யாருக்கும் தெரியல்ல
யார்வந்தாலும் யார் போனாலும்
எதுவும் ஆகல்ல- நமக்கு
எதுவும் ஆகல்ல.. யார்யார் வருவார்

போகா திருந்து
ஆட நினைத்தவர்
புரண்டு கிடக்கின்றார்- சிலர்
பறந்தும் போகின்றார்
ஆகா தென்று ஒதுக்கி வைத்தவர்
ஆட வருகின்றார்- ஆட்டம்
ஆட வருகின்றார்! யார் யார் வருவார்

ஆட்டங்கள் எத்தனை
அரங்குகள் எத்தனை
காட்சிகள் எத்தனையோ..?இங்கு
காட்சிகள் எத்தனையோ?
காட்சிகள் மாறுது
பாத்திரம் மாறுது
கவலை தீரல்லயே- நம்
கவலை தீரல்லயே! யார் யார் வருவார்

கருவினில் புதுமை
தரும் கதை தன்னைத்
தருபவர் யாருண்டு - இங்கு
தருபவர் யாருண்டு?
புதுக் கதை படைத்துப்
புதுமைகள் செய்து
வழங்கிட யாருண்டு?நமக்கு
வழங்கிட யாருண்டு? யார்யார்

11-06-2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29. நாளை நமக்கும் மூப்பு வரும்

*(ஒக்டோபர்-01 உலக முதியோர் தினம்)*

நாளை நமக்கும் மூப்புவரும்
நரைக்கும் இளைக்கும் அசதிவரும்
இளமைத் தோற்றம் மறைந்துவிட
எவர்க்கும் முதுமை வந்துவிடும் நாளை

முதுமை யாளர் -மூத்தவர்கள்
முழுதாய் நமக்காய் உழைத்தவர்கள்
இளமை வாழ்வை நமக்கென்றே
அன்று தொலைத்த பெரியவர்கள் நாளை

பழசு என்றே அவர்களினைப்
பழித்தால் மனசு நோகாதோ?
அனுப வத்தால் உயர்ந்திட்ட
அறிஞர் தம்மை விலக்குவதோ? நாளை

தள்ளி வைத்து முதியவரைத்
தவிக்க விடுதல் முறைதானோ?
அள்ளி அணைத்து வளர்த்தவரை
அலைந்து திரிய விடலாமோ? நாளை

தொல்லை யென்று அவர்களினைத்
தூரவிட்டு விலகு வதோ??
பிள்ளை உள்ள போதினிலும்
பெற்றோர்- மூத்தோர் வருந்துவதோ? நாளை

*27-09-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30. சிறுவர் நலன்கள் காத்திடுவோம்.!

(ஒக்டோபர்-01 உலக சிறுவர் தினம்)

சிறுவர் நலன்கள் காத்திடுவோம்
சிறந்து விளங்கச் செய்திடுவோம்
மலரும் அந்த மொட்டுகளின்
மகிமை அறிந்து வாழ்த்திடுவோம்!
சிறகை விரித்துப் பறக்கட்டும்
சின்னஞ் சிறிய சிட்டுக்கள்
இடையில் சிறகைச் சிதைக்காமல்
இருந்து காப்போம் நாம்அவரை! சிறுவர்

மொட்டு மலர்ந்து விரிவதற்குள்
மூர்க்கர் பறித்து விடுகின்றார்
பட்டாம் பூச்சி பறப்பதற்குள்
வண்ணச் சிறகை நசிக்கின்றார்
கட்டாந் தரையில் முத்துகளை
கல் நெஞ்சர்கள் உடைக்கின்றார்
சிற்பி இந்தச் சிறுவர்களின்
சின்னஞ் சிறிய கரங்களினை
கட்டிப் போட்டு வதைக்கின்றார்
கயவர் ..,ஐயோ. காத்திடுவோம்! சிறுவர்

வளரும் சிறுவர் துன்பங்கள்
வன்முறை யாவும் ஒழித்திடுவோம்
தகாத செயல்கள் புரிகின்ற
தரங் கெட்டோரை அழித்திடுவோம் சிறுவர்

*14-09-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *31. மதுவினைக் குடித்து*

மதுவினைக் குடித்து
மதியினை இழந்து
மயங்கிடும் சோதரனே-
குடி உனைக் குடிக்கும்
குடும்பத்தை அழிக்கும்
முடிவெடு சோதரனே! மதுவினை

குடிஉனைக் குடிக்கும்
குடும்பத்தை அழிக்கும்
அறிந்திட மாட்டாயா- நீ
திருந்திட மாட்டாயா மதுவினை

நெறிமுறை தவறி வாழ்ந்தவ ரெல்லாம்
நிம்மதி இழந்தார்கள்- கெட்ட
நோயினில் உழன்றார்கள்
வரன்முறை யோடு வாழ்ந்தவ ரேதான்
வாழ்வினில் உயர்ந்தார்கள்- நல்ல
வளங்களும் பெற்றார்கள் மதுவினை

சீரிய பாதை தேர்ந்து நடந்தால்
சிக்கல்கள் அறுந்து விடும்- உன்
சிந்தையில் மகிழ்ச்சி வரும்!
மாறிடு நீயும் குடியினை விட்டு
மலர்ச்சியே நாடி வரும்- வாழ்வில்
மகிழ்ச்சியே கூடி வரும்! மதுவினை

*12-11-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 32. வாழ்க்கை என்பது நிரந்தரமா?

வாழ்க்கை என்பது நிரந்தரமா?
வாழ்க்கை என்பது பனித்துளியா?
வாழ்க்கை இங்கே சில காலம் -அதை
முறையாய் வாழ வேண்டாமா? வாழ்க்கை

எறும்பும் இங்கே வாழ்கிறது
இயங்கிக் கொண்டே இருக்கிறது
சுறு சுறுப்பாய் இயங்கி அது
சேர்ந்து வாழ்ந்தே மகிழ்கிறது வாழ்க்கை

காகம் நமக்கு ஒருபாடம்
காலை விரைந்து எழுகிறது
கிடைக்கும் உணவைப் பகிர்ந்துண்டு
கருணை யோடு வாழ்கிறது வாழ்க்கை

கற்பில் உயர்ந்து வாழ்கிறது
காக்கை,பண்பில் உயர்கிறது
சோடி விட்டு யாரோடும்
மாறிக் காக்கை சேராதே! வாழ்க்கை

வாழ்க்கை என்பது வாழத்தான்
வாழ்வில் நட்பு பேணத்தான்
வாழும் வரையில் நெறியோடு
வாழ்ந்து மகிழ்வோம் முறையோடு. வாழ்க்கை

*30-05-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *33. வானக் கூரை பூமித் தட்டு..*

வானக் கூரை பூமித் தட்டு
வந்தோம் நாங்கள் இங்கே தான்
இறைவன் தந்த சிறு பொழு திங்கே
இதனால் வந்தோம் வாழத்தான்

வானக்கூரை..

இரவில் தூங்கி எழும்பா திருந்தால்
எங்கே நாங்கள் இல்லை தான்
வெயிலும் இறைக்கும் மழையும் பொழியும்
எல்லாம் மாறி மாறித் தான்

வானக் கூரை

வருநா ளெல்லாம் ஒரு நாளேதான்
அழகாய் மாற்ற வேண்டும் நாம்,
அமைந்த நாளை அழகாய் மாற்றி
அன்பாய் வாழ்வோம் இங்கே நாம்!

வானக் கூரை

***02-06-2022***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34. விரும்பிய வாழ்க்கை.

விரும்பிய வாழ்க்கை
வரவில்லை யென்று
வீணே அழுகின்றாய்-நண்பா
வீணே அழுகின்றாய்
நடந்ததை யேதான்
நினைத்து நினைத்து
நாளும் புலம்புகிறாய்-நண்பா
நாளும் புலம்புகிறாய்? விரும்பிய

இரவு கடந்தால்
உதயம் புலரும்
ஏன்நீ கலங்குகிறாய்- நண்பா
ஏன்நீ கலங்குகிறாய்?
கனவு,வாழ்க்கை
காலம் சிறிதே
கவலை விட்டுவிடு- நண்பா
கவலை விட்டு விடு விரும்பிய

நடந்தவை யெல்லாம்
கடந்தவை யேதான்
நண்பா மறந்து விடு
நல்லதே நடக்கும்
நாயன் அருள்வான்
நம்பி நடந்து விடு! விரும்பி

மறதியோர் மருந்து
மறந்திடு கவலை
மனதில் உறுதி யெடு!
இனிவரும் காலம்
இன்பமே என்று
எண்ணி நடந்து விடு! விரும்பி

*09-06-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 35. என்ன. பதில் நான் சொல்வேன்

என்ன பதில் நான் சொல்வேன் உன்னிடம்
எந்த ஒரு பதிலுமில்லை என்னிடம்
எதிர்காலச் சந்ததி நீ கேட்கிறாய்
எதைச் சொல்வேன் பதிலில்லை என்னிடம் என்ன பதில்

மக்களுக்கு மதிப்பு இருந்தது
இருந்து கொள்ள இடமும் இருந்தது
உண்டு வாழ உணவும் இருந்தது
இன்று அவை எங்கே என்று கேட்கிறாய்?
ஏது பதில் என்னிடத்தில் இல்லையே..! என்னபதில்

நிம்மதியைத் தொலைத்து விட்டோம்
நீண்ட தூரம் கியூவில் நின்றோம்
வீட்டிலில்லை றோட்டில்தானே நிற்கிறோம்
வேதனையை யாரிடத்தில் சொல்லுவோம்! என்ன பதில்

சுந்தரமாய் நாடு இருந்தது
சுதந்திரமும் கிடைத்தே இருந்தது
வளங்கள் இங்கு குவிந்திருந்தது
வந்தபிழை என்னவென்று கேட்கிறாய் என்ன பதில்

இலங்கையராய் எண்ண வில்லை
எங்களுக்குள் இணக்க மில்லை
இனம் பார்த்தோம் மதம் பார்த்தோம் , அழுகிறோம் -எங்கள்
தெரிவினிலே தவறு விட்டோம்
தவிக்கிறோம் என்ன பதில்

***25-06-2022***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 36. நாயனின் நாட்டமின்றி...

நாயனின் நாட்ட மின்றி
நிகழ்வுகள் நடப்ப தில்லை!
காரணம் ஏது மின்றிக்
காட்சிகள் விரிவ தில்லை! நாயனின்

இரவது வந்தால், பின்னர்
பகல்வரும்.., இருள்கள் போகும்!
இடர்களே தொடரா.., மாறும்
இன்பமும் வந்து சேரும்! நாயனின்

சோதனை யொன்றி ருந்தால்
முடிவதும் வந்து சேரும்!
வேதனை அகன்று போக
வெற்றிவந் தடையக் கூடும்! நாயனின்

வந்ததை எண்ணி யெண்ணி
வருந்திடத் தேவை யில்லை!
வந்ததும் கடந்து போகும்
வாழ்க்கையில் மகிழ்ச்சி மீளும்! நாயனின்

உளமது தளர்ந்தி டாமல்
உறுதியோ டிருந்து கொண்டு
இறைவனைத் துதித்து வாழ்வோம்
எம்சுமை இறக்கி வைத்தே! நாயனின்

*10-06-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37. அல்லாஹ்..யா அல்லாஹ்

அல்லாஹ் யா அல்லாஹ்
அல்லாஹ் யா அல்லாஹ்
அருளாளன் நீயே
அன்பாளன் நீயே
அகிலத்திற் கெல்லாம் அதிபதி நீயே!
அர்ரஹீம். அர்ரஹ்மான்

பிரார்த்தனைக் குரிய பேரிறை நீயே
புகழ்தலுக் குரிய நாயனும் நீயே
உன்னை யன்றி யாரிடம் கேட்போம்
எம்குறை தீர்க்க யாருளர் றப்பே!
அல்லாஹ் யா அல்லாஹ்

எங்கள் பிழைகள் பொறுத்தருள் வோனே
ஏந்திய கைக்கு இரங்கிடு வோனே
உன்னைப் பணிந்தே உருகினோம் அல்லாஹ்
மன்னிப்பாய்நீ மாபெரி யோனே!
அல்லாஹ் யா அல்லாஹ்

சோதனை தானோ யா றஹ் மானே
நோயில் கிடந்து உழல்கிறோம் அல்லாஹ்
வேதனை தீர்த்து அருள் புரிவாயே
பிழைகள் பொறுத்து சுகம் தருவாயே!

அல்லாஹ் யா அல்லாஹ்

*17-08-2021*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38. பொழுதென்றும் நமக்கென்றே விடிகின்றது..!

பொழுதென்றும் நமக்கென்று விடிகின்றது
மலர்கூட நமக்கென்றே மலர்கின்றது
மலை,கடல் ஆகாயம் நமக்காகவே-இந்த
மண்காணும் படைப்பெல்லாம் நமக்காகவே!

பொழுதென்றும்

மனிதர்கள் உலகத்தில் மதிப்பானவர்
மனசாலும் அறிவாலும் சிறப்பானவர்
இறைதந்த அந்தஸ்து உயர்வானதே -
இதை
உணராமல் வாழ்விங்கு வீணானதே!

பொழுதென்றும்

அழகான மனமெங்கே..?, நிலை மாறினோம்
அறிவோடு நடக்காமல் தடு மாறினோம்
இறைவனை நெருங்காமல் நாம் ஆடினோம்
இடர்ப்பட்டுத் துயர்பட்டுத் தான் வாடினோம்

பொழுதென்றும்

மதியோடும் மதிப்போடும் நாம் வாழணும்
மக்களை அன்பாலே அணைத் தாளணும்
மனதிலுயர் எண்ணங்கள் பூத் தாகணும்
மனிதம் மலர்ந்திங்கு செழித் தோங்கணும்

பொழுதென்றும்

*31-08-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39. மனசு தானே வாழ்க்கை நண்பா!

*மனசு தானே வாழ்க்கை நண்பா!*
*மனசை நீயே ஆளப்பாரு!*
*மலர்ந்து மகிழ்ந்து வாழப் பாரு*

*மனசு போகும் போக்கில் போனால்*
*பாழாய்ப் போகும் வாழ்க்கை நண்பா!*

*மனசை அடக்கி ஆளப்பாரு*
*மனசு தெளிந்து வாழப்பாரு!* *மனசு*

*ஆழ்மன தினிலே அன்பைச் சுரந்தே*
*அருமையாக உறவில் இணைந்தே*
*அமைதி யாக வாழப் பாரு*
*அன்பு நண்பா குழப்பம் தீரு!* *மனசு*

*தாழ்வு எண்ணம் தன்னை விட்டு*
*தன்னம் பிக்கை யோடு நடந்து*
*வாழ்வில் உயரும் வழியைப் பாரு*
*வா வா எல்லாம் மனசு தான்* *மனசு*

*மந்திர மேது, மனசே வாழ்க்கை*
*மனசில் தூய எண்ணத் தோடு*
*மலர்ந்து மகிழ்ந்து வாழப் பாரு*
*தொந்தர வில்லா வாழ்க்கை அமைக்க*
*தொடர்க பயணம் நண்பனே!* *மனசு*

***09-09-2021***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40. தொழுதே நாம் கையேந்தி..

தொழுதே நாம் கையேந்தி உனைக் கேட்கிறோம்
அழுதே நாம் மன்றாடி உனை வேண்டினோம்
பொல்லாத அகங்காரக் குணம் போக்குவாய்
அல்லாஹ்வே எம்பாவக் குறை நீக்குவாய்!

தொழுதே

வல்லோனே அல்லாஹ்வே அருள் வேண்டினோம்
நல்லோராய் நாம்வாழ உனை நாடினோம்
உள்ளத்தில் ஒளியேற்றி இருள் போக்குவாய்
உயர்வான அடிமையென எமை மாற்றுவாய்

தொழுதே

மாபெரிய றஃமானே உனைப் போற்றினோம்
மன்னிக்கும் அன்பாளா உனை ஏற்றினோம்
நன்மை செய்தோர் பட்டியலில் எமை ஆக்கிடு
நரகத்தின் வேதனைகள் தான் போக்கிடு!

தொழுதே

ஈருலகின் அதிபதியே உனைப் பணிகிறோம்
எம்பிழைகள பொறுத்துவிடு மனங்கசிகிறோம்
புண்ணியங்கள் செய்தவராய் எமை ஏற்றெடு!
பொறுத்தருள்க பேரிறையே எமைச் சேர்த்தெடு

தொழுதே

***23-08-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 41. கல்பு உருகி வடியுதம்மா..

கல்பு உருகி வடியுதம்மா
கண்ணீர் ஆறாய்ப் பெருகுதம்மா
கர்ப லாவின் துயர நிகழ்வு
காட்சி யாகி விரியுதம்மா கல்பு உருகி

மக்க ளாட்சி வீழ்ந்த தம்மா
மனிதநேயம் மறைந்த தம்மா
குடும்ப ஆட்சி வாரி சுரிமை
கொள்கையாகி வளர்ந்த தம்மா கல்பு உருகி

உலகம் முழுதும் அழுத தம்மா
உலுத்தன் எஸீதின் கொடுமை யம்மா
வரலாற் றினிலே
கருமைப் புள்ளி
முஹர்ரம் பத்தில் வந்த தம்மா கல்பு உருகி

அண்ணல் நபியின் அருமைப் பேரர்
உன்னி யெழுந்தார் உரிமை கேட்டு
இமாம் ஹூசைனாம்
ஈரல் கொழுந்தை
எஸீது வெட்டி விட்டா னம்மா! கல்பு உருகி

வரலாற் றினிலே
கருமைப் புள்ளி
முஹர்ரம் பத்தில் வந்த தம்மா
கர்பலாவின் துயர நிகழ்வு
காட்சி யாகி விரியு தம்மா! கல்பு உருகி

*20-08-2021*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 42. ஏந்தலரே அண்ணலரே!

ஏந்தலரே அண்ணலரே
இறுதி நபி நாயகமே
சாந்த வடி வானவரே
சங்கை மிகு முஹம்மதரே
சலாம் சொல்கிறோம்!

அகிலத்தின் அருட்கொடையாய்
அவதரித்த திருநபியே
கருணையுள ரவூஃப் ஆக
இரங்குகிற பேரருளே
சலாம் சொல்கிறோம்

யாநபி ஸலாம் அலைக்கும்
யாரசூல் ஸலாம் அலைக்கும்
யாஹபீப் ஸலாம் அலைக்கும்

நம்பிக்கைக் குரிய எங்கள்
நாயகமே அல் அமீனே
உஸ்வத்துல் ஹஸனாக
உயர்ந்து நின்ற,ஒளி விளக்கே!
சலாம் சொல்கிறோம்!

விண்ணுலகம் சென் றிறையைக்
கண்டு வந்த தீன் சுடரே
ஒன்று இறை ஒன்று மறை
என்றுரைத்த மாநபியே!
சலாம் சொல்கிறோம்!

யாநபி ஸலாம் அலைக்கும்!
யாரசூல் ஸலாம் அலைக்கும்
யாஹபீப் ஸலாம் அலைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈருலக வாழ் வொளிர
இறை மார்க்கம் ஈந்தவரே
ஆகிறத்தில் ஈடேறப்
பரிந்துரையும் செய்பவரே
சலாம் சொல்கிறோம்!

ஏந்தலரே முஹம்மதரே
எங்கள் நபி நாயகமே!
சாந்த வடி வானவரே
சங்கை மிகு தூதுவரே
சலாம் சொல்கிறோம்!

யாநபி ஸலாம் அலைக்கும்
யாறசூல் ஸலாம் அலைக்கும்
யாஹபீப் ஸலாம் அலைக்கும்

*16-06-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 43. மகனே உன் வரவாலே...

மகனே உன் வரவாலே மலர்கிறேன்
மனசெல்லாம் நிறையுதடா மகிழ்கிறேன்! மகனே

தகதகக்கும் பிரகாசம்
தண்மதியோ உன் வதனம்
மகனே நான் மகிழ்ச்சியிலே திளைக்கிறேன் - என்
மனசெங்கும் உல்லாசம் பறக்கிறேன் மகனே

பத்துமாதம் சுமந்தவளைப்
பார்க்கின்றேன், திருமகளோ
இப்பொழுது உனை ஏந்தி மகிழ்கிறாள்- அவள்
இன்முகத்தோ டுன்முகத்தை அணைக்கிறாள்! மகனே

பெற்றெடுக்கப் பட்டவலி
அத்தனையும் மறந்து விட்டாள்
புத்திரனே குலக் கொழுந்தே சிரிக்கிறாள்- உன்
பூமுகத்தைப் பார்த்தவளோ மிதக்கிறாள் மகனே

மடிதவழும் கண்மணியே
மணிமுத்தே வெண்சங்கே
இனி யுனக்காய் நாம்வாழ்வோம் கண்மணி-எம்
பெயர் சொல்லும் நல்லவனாய் இனியவனாய் பெருமகனாய்
இறையருளால் நீவளர்க கண்மணி!

மகனே

21-09-2021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 44. இப்பொழுது நினைத்தாலே

இப்பொழுது நினைத்தாலே
இதயம் ஏங்குது
உத்தமரின் தியாக வாழ்வில் உள்ளம் உருகுது!

பல்லுடைந்த போதினிலும் தீன் மலர்ந்தது-அவர்
சொல்,செயலில் எப்போதும் புனிதம் மிளிர்ந்தது!- நபி
பட்ட துயர் கேட்கும் போது
கண் கலங்குது-புண்
பட்டார்கள் நபி மேனி,நம் உடல் நடுங்குது!

இப்பொழுது

பொறுமை,சகிப்பு என்று உள்ளம்
உறுதி கொண்டது-நபி
புரியவைத்தார் உலகில் மார்க்கம்
மலர்ந்து நின்றது!

தொடர்ச்சி யாக வேதனை தான்
மனசு நோகல்ல
தூயவனின் இறை பணியில்
சோர்வு நேரல்ல!

இப்பொழுது

மஸ்ஜிதிலே நாசம் செய்தும்
நபிகள் பேசல்ல
சிறுநீரைக் கழித்தவர்க்கு
ஏசப் போகல்ல!

அன்புநெறி அமைதி வழி
அவை நமக்கு அண்ணல் நபி காட்டிய பாதை
அந்த வழி நடந்து கொண்டால் நமக்கெது வாதை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டிவிட வந்தவனை மன்னித்தே விட்டார்- அவரில்
குப்பை கொட்டி வளர்த்தவளின்
நோய் பார்க்கச் சென்றார்!

இப்பொழுது

எத்தனையோ கொடுமைகளை இறுதிநபி பொறுத்தார்-
இருபத்து மூன்றாண்டில் மார்க்கத்தை அமைத்தார்!

பொறுமையினால் வென்றநபி
பூரணரே நாதர்
மனிதருக்குள் மா ணிக்கம்
மாண்புடைய நபிகள்.

இப்பொழுது

*19-10-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45. பாடுகிறோம் உங்கள் புகழ் யாரசூலுல்லாஹ்

*பாடுகிறோம் உங்கள் புகழ் யா ரஸூலுல்லாஹ்!*
*யாதுமிலை நீங்களின்றி யா ரஸூலுல்லாஹ்!*

*பேரொளியாய் நீங்களின்றி யா ரஸூலுல்லாஹ்*
*வானமில்லை பூமியில்லை யாது மில்லையே!*

*அருள் மழையே அண்ணலரே*
*பெருமகனே பேரருளே*
*கருணை மிகு நாயகமே யா ரஸூலுல்லாஹ்*
*கண்மணியே முஹம்மதரே யாரஸூலுல்லாஹ்!* பாடுகி

*தூதுரைத்த மாமலரே*
*தீன் மார்க்கப் போதகரே யாரசூலுல்லாஹ்!*
*ஓரிறையை நம்ப வைத்து*
*உயர்கலிமா மொழியவைத்த*
*உத்தமரே முஹம்மதரே யா ரஸூலுல்லாஹ்!* பாடுகி

*அருள்மறையை அளித்தவரே*
*அண்ணலரே முஹம்மதரே*
*யாரஸூலுல்லாஹ்!*
*சொல், செயலால் வழிகாட்டி*
*தூயமறை நெறிகாட்டி*
*தொழுகையினைப் பரிசளித்த*
*திருநபியே முஹம்மதரே யா ரஸூலுல்லாஹ்!* பாடுகி

*அன்புருவே அருட்கொடையே*
*அஹமதரே முஹம்மதரே*
*யா ரஸூலுல்லாஹ்*
*அன்பான மக்களுக்கு*
*துன்ப மணு காதிருக்க*
*தன்கருணை பொழிபவரே யா ரஸூலுல்லாஹ்!*
*சபா அத்தைச் செய்பவரே*
*யா ரஸூலுல்லாஹ்!* பாடுகி

***02-09-2021***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 46. உலகாளும் நாயனே..!

உலகாளும் நாயனே உனை வேண்டினேன்
நலம்நாடி நான்உருகிக் கையேந்தினேன்

ஈருலகம் ஆளுகின்ற பேராளனே
ஏந்தும்கை மறுக்காத அருளாளனே

என் நலத்தினில் சிறு குறை
ஏன்நாயனே? உன்நாட்டமோ?
பூரண நலம் நல்குவாய்

உலகாளும்

சிறுமழை காற்றினில் உடல் குளிர்ந்தது
ஒருகணப் பொழுதினில் கண் சிவந்தது
இருமலும் காய்ச்சலும் தொடர்ந்திட்டது- உடல்
இயக்கங்கள் ஆங்காங்கே தடைப்பட்டது

உலகாளும்

பதற்றத்தில் நெஞ்சம் படபடத்தது
எதற்குமே மனசில்லா நிலை வந்தது
சுகம் தந்தாய் நாயனே உனை இறைஞ்சினேன்
பூரண நலம் நாடி கையேந்தினேன்

உலகாளும்

உடற் சோர்வு தனைப் போக்கு அருளாளனே
மன அமைதி தந்துவிடு பேராளனே!
உடலுள்ளம் சக்திபெற வழிகாட்டிடு
உற்சாகம் பிறந்துவிட உணர்வூட்டிடு!

உலகாளும்.

*25-12-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 47. இனிய நல் மார்க்க நெறியினில் வாரழும்...

இனிய நல் மார்க்க நெறியினில் வாழப்
பிறந்த நம் சோதரனே
புனித ரெம் நபிகள் போதனை மறந்து
வாழ்வது சரிதானோ- கெட்டு
வீழ்வது முறை தானோ? இனிய

பொறுமையாய் வாழ்ந்த பூமான் நபிகள்
கருணையைப் பொழிந்தார்கள்- மக்கள்
கல்பினில் பதிந்தார்கள்
எளிமையாய் வாழ்ந்த ஏந்தலர் நபிகள்
ஏழையை மதித்தார்கள் -ஏழை
வரியையும் விதித்தார்கள்! இனிய

உள்ளங்க ளெல்லாம் ஈமான் விதையை
ஊன்றி விதைத்தார்கள்- நபிகள்
உயர்மறை தந்தார்கள்
சொல் செயலெல்லாம் தூய்மையின் ஒளியைத்
துலங்கிடச் செய்தார்கள் -தூய
வழிமுறை சொன்னார்கள் இனிய

இறைதுதி விட்டு இலட்சியம் விட்டு
இயங்கிடும் சகோதரனே
மறையினைத் தந்த இஸ்லாம் காட்டும்
மார்க்கம் இதுதானோ- புனித
மார்க்கம் இது தானோ
முறையொடு என்றும்
நெறியொடு வாழ்ந்து
நிம்மதி யடைவோமா- நரக
நெருப்பினைத் தவிர்ப்போமா? இனிய

*16-05-2022*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48. இதயத்தில் வாழும் இனிய மகனே!

இதயத்தில் வாழும் இனிய மகனே
உன்னை வாழ்த்து கிறேன்
நிதமும் இறையைத் தொழுது கொண்டே
துஆவில் இறைஞ்சு கிறேன்- உன்
நலவை விரும்பு கிறேன் - நான்
நாளும் வேண்டு கிறேன் இதயத்தில்

செல்வந்த னாகிச் சிறப்புடன் வாழ
தினமும் வாழ்த்து கிறேன்
உள்ளம் மலர்ந்து உயர்ந்தவ னாக
வாழ்ந்திட வேண்டு கிறேன்- தினம் வணங்கியே துதிக் கின்றேன்

இதயத்தில்

பணத்தினை விடவும் செல்வங்க ளுண்டு
பகர்ந்திடத் துடிக் கின்றேன்
பண்பொரு செல்வம்,பண்பில் உயர்ந்து
பளிச்சிட வேண்டு கிறேன்- பாரில்
ஜொலித்திட வாழ்த்து கிறேன் இதயத்தில்

கல்வி யோர் செல்வம்,கருத்தொடு கற்று
மிளிர்ந்திட வேண்டு கிறேன்
நல்ல தோர் ஒழுக்க சீலராய் என்றும்
சிறந்திட வேண்டு கிறேன் -என்
கரங்களை ஏந்து கிறேன் இதயத்தில்

செல்வந்த னாகிச் சிறப்பாய் வாழ
உன்னை வாழ்த்து கிறேன்
கல்வி,ஒழுக்கம்,பண்புக ளெல்லாம்
செல்வமே செப்பு கிறேன் இதயத்தில்

*17-05-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 49. நாயனே உன்னை மறந்திருந்தேன்!

நாயனே உனை மறந்தேனே
"நானு"க்குள் அமிழ்ந்திருந்தேனே
ஆணவத் திமிரோடு ஆடினேன்-
நாயனே
உன்னை நான் மறந் திருந்தேனே!

மாடிகள் கட்டி வாழ்ந்திருந்தேன்
மமதையில் உனை மறந்தேன்
கோடிகள்
சேர்த்துக் குவித்து வைத்தேன்
குடி போதையில் நான் உழன்றேன். நாயனே

நாத்திக ரோடு சேர்ந் திருந்தேன்-
இறை.-
நம்பிக்கை அற்றி ருந்தேன்
கூத்திக ளோடு இரவு பகல்
கொஞ்சி மகிழ்ந்தி ருந்தேன்! நாயனே

சொத்துகள் சுரண்டிச் சேர்த்து வைத்தேன்-
சொர்க்கமென்றே நினைத்தேன் - அதைச்
சொர்க்க மென்றே நினைத்தேன்!
இப்பொழு திங்கே இருந்து அழுகிறேன்
என் பிழை பொறுப்பாயா? -இறைவா.
என்பிழை பொறுப் பாயா?

நான் நான் நானென்று வாழ்ந்தி ருந்தேன்- நான்
"நானு"க்குள் அமிழ்ந் திருந்தேன்
நாயனே உன்னை மறந்திருந்தேன்
என் பிழை பொறுப் பாயா- இறைவா.
என்பிழை பொறுப்பாயா? நாயனே

06-07-2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 50. ஷவ்வாலின் பிறை வானில்

ஷவ்வாலின் பிறை வானில் தெரிகின்றது
சந்தோசம் உலகெங்கும் விரிகின்றது
புடம்போட்ட ரமழானும் பிரிகின்றது
பெருநாளில் மனமின்று நிறைகின்றது

ஷவ்வாலின்

இரவெல்லாம் இறையில்லம் நாம் நாடினோம்
நிறைவாகப் பல நன்மை நாம் தேடினோம்
பசியோடும் தாகித்தும் விசுவாசியாய்
பயிற்சிகள் நாம் பெற்றோம் நோன்பாளியாய்!

ஷவ்வாலின்

ஸதகாவின் பெருமைகள் புரிகின்றது
பரகத்து செழிப்பெல்லாம்
பொலிகின்றது.
மறைதந்த ரமழானும் பிரிகின்றது
மனமெங்கும் அருள்மறையே மணக்கின்றது!

ஷவ்வாலின்

மாண்பான நோன்பின்று பிரிகின்றது
மகிழ்வாகப் பெருநாளும் மலர்கின்றது
உறவோடும் உணர்வோடும்
நாம் கூடுவோம்
ஆத்மீக பலம்பெற்று நிதம் வாழுவோம்

ஷவ்வாலின்

*02-05-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 51. முஹர்ரம் பிறந்தாச்சு-

முஹர்ரம் பிறந்தாச்சு
புதிய
வருடம் மலர்ந்தாச்சு
முஸ்லிம் மக்களின் முதலாம் மாதம்
முஹர்ரம் வந்தாச்சு!
முஹர்ரம்

புதிய வருடம் எங்கள்
புதிய வருடம்..

பழையன கழித்துப் புதியன நாட
நன்மை வழியில் நாங்கள் நடக்க..
நாயன் அளித்த கண்ணிய மாதம்..
முஹர்ரம் வந்தாச்சு.. எங்கள்
வருடம் பிறந்தாச்சு..
முஸ்லிம் மக்களின் முதலாம் மாதம்
முஹர்ரம் வந்தாச்சு!..

குர்ஆன் கூறும் புனித மாதம்..
மோதல்,போர்கள் தடுத்த மாதம்..
சாந்தி சொல்லும் சங்கை மாதம்..

முஹர்ரம் வந்தாச்சு..

ஓரிறைக் கொள்கையில் உறுதியாய் நிற்கக்
கூறிடும் காட்சிகள் கொண்டு நிறைந்த
மாதம் பிறந்தாச்சு..புது வருடம் மலர்ந்தாச்சு
முஸ்லிம் மக்களின் முதலாம் மாதம்
முஹர்ரம் மலர்ந்தாச்சு..

வாழ்த்துகள் சொல்வோம் வாரி
அணைப்போம் வாழ்த்துகள் சொல்வோம்

மலர்ந்த புதிய வருடம் எங்கள்
மனங்களி லெல்லாம் மகிழ்வினைத் தருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்த குணங்கள் கருணை, ஈகை
நிறைக எங்கள் நெஞ்சங்க ளெல்லாம்!
சுவன பதியை நோக்கிய தாக
அமைக எங்கள் செயல்கள் அனைத்தும்!

முஹற்ரம்..

*31-07-2022*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 52. பெருநாள் ஹஜ் பெருநாள்..!

பெருநாள் ஹஜ் பெருநாள்!
தியாக வாழ்வின் மகிமை உணர்த்தும்
திருநாள் ஹஜ் பெருநாள்!

இறைவன் அழைப்பை ஏற்று நடந்து
பொருள்கள் செல்வம் யாவும் துறந்து
இஹ்ராம் கட்டி இறைவனை நாடி
கஹ்பா வினையே கண்டு
களித்து
அன்றுப் பிறந்த பாலக னாக
பாவம் கழித்து மீளும் நந்நாள்!

பெருநாள் ஹஜ் பெருநாள்.
வரலா றொன்றின் நினைவை மீட்கும்
திருநாள் ஹஜ் பெருநாள்

ஈர நெஞ்சர் இப்றாஹீம் நபி
இறைவன் கட்டளை இட்டத னாலே
இஸ்மாயீ லெனும் அருமை மைந்தரை
அறுக்கத் துணிந்த தியாகக் காட்சி
மலர்ந்த நந்நாள் மகிமைத் திருநாள்

பெருநாள் ஹஜ் பெருநாள்
தியாக வாழ்வின் மகிமை உணர்த்தும்
திருநாள் ஹஜ் பெருநாள்!

அறு என்றிறைவன் ஆணையிட் டிருந்தால்
அறுங்கள் என்றே உறுதியாய் நின்ற
இஸ்மாயில் நபியின் உளத்திடம் கூறும்

திரு நாள் ஹஜ் பெருநாள்
தியாக வாழ்வின் மகிமை உணர்த்தும்
பெருநாள் ஹஜ் பெருநாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஸபா - மர்வா குன்று கிட்கிடையே*
*தண்ணீர் தேடியே ஹாஜறா அன்னை*
*ஓடி ஓடியே தவித்த காட்சி*
*மனதில் மலரும் மகிமைத் திருநாள்*

*பெருநாள் ஹஜ் பெருநாள்*
*தியாக வாழ்வின் பெருமை உணர்த்தும்*
*திருநாள் ஹஜ் பெருநாள்!*

***09-07-2022***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53. வல்ல நாயனைப் பிரார்த்தனை புரிந்தால்..

வல்ல நாயனைப் பிரார்த்தனை புரிந்தால்
உள்ளமும் உடலும் உறுதியைப் பெறுமே
உறுதியைப் பெறுமே!

செல்லும் வழிகள் வெற்றியைத் தருமே
நல்ல செயல்களால் நன்மை மலருமே
நன்மை மலருமே வல்ல

அல்லாஹூ அக்பர்
அல்லாஹூ
அல்லாஹூ அக்பர்

போலியும் புரட்டும் போய் முடிந்திடுமே
தோழமை உணர்வில் தூய்மை மிளிருமே
தூய்மை மிளிருமே!

நாளும் பொழுதும் நன்மை நடக்குமே
வாழும் வாழ்வில் வசந்தம் வருமே
வசந்தம் வருமே! வல்ல

அல்லாஹூ அக்பர்
அல்லாஹூ
அல்லாஹூ அக்பர்

குறைகள் அகன்று நிறைவு தோன்றுமே
பொறுமை வாழ்வு பூத்துக் குலுங்குமே
பூத்துக் குலுங்குமே!
பொறாமை, தீங்கு நீங்கி மறையுமே
முடிவில் நமக்கோர் விடிவு பிறக்குமே
விடிவு பிறக்குமே! வல்ல

அல்லாஹூ அக்பர்
அல்லாஹூ
அல்லாஹூ அக்பர்

*19-06-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 54. ஸலவாத் சொல்கிறோம்!

ஏந்தலரே அண்ணலரே
எங்கள் நபி முஹம்மதரே
ஸலவாத் சொல்கிறோம்!

ஸல்லல்லலாஹூ அலாமுஹம்மத்
ஸல்லல்லாஹூ அலைஹிவ ஸல்லம்
ஸல்லல்லாஹூ அலாமுஹம்மத்
ஸல்லல்லாஹூ அலைஹிவ ஸல்லம்

சாந்தி மார்க்கத் தூதுவரே
சங்கை மிகு நாயகமே
கண்மணியே ரத்தினமே
கருணையொளி தீன்சுடரே
ஸலவாத் சொல்கிறோம்
( ஸல்லல்லாஹூ அலா முஹம்மத்)

அகிலத்தின் அருட் கொடையே
அன்புமழை வான் முகிலே
மணிவிளக்கே மா நபியே
மரகதமே திரு வுருவே
ஸலவாத் சொல்கிறோம்
(ஸல்லல்லாஹூ அலா முஹம்மத்)

புனிதமறை ஈந்த வரே
போதனையால் ஈர்த்த வரே
ஈமானை விதைத்த வரே
இறைநேசம் வளர்த்த வரே
ஸலவாத் சொல்கிறோம்!

ஸல்லல்லாஹூ அலா முஹம்மத்
ஸல்லல்லாஹூ அலைஹிவ ஸல்லம்
ஸல்லல்லாஹூ அலாமுஹம்மத்
ஸல்லல்லாஹூ அலைஹிவ ஸல்லம்
ஸல்லல்லாஹூ அலா முஹம்மத்
யாறப்பி ஸல்லி அலைஹிவ ஸல்லிம்.

*18-08-2021*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவேந்தல் பாலமுனை பாறூக்
## நூல்கள்: -

பதம் (1987) கவிதை

சந்தனப் பொய்கை (2009) கவிதை

கொந்தளிப்பு (2010) நவீன காவியம்
(இலங்கை அரச சாஹித்ய மண்டலச் சான்றிதழ் பெற்றது)

தோட்டுப் பாய் மூத்தம்மா (2011) நவீன காவியம்
(இலங்கை அரச சாஹித்ய மண்டல விருது, கொடகே சாஹித்ய மகாகவி து. உருத்திரமூர்த்தி விருது, யாழ் இலக்கியப் பேரவைச் சான்று என்பன பெற்ற நூல்)

எஞ்சியிருந்த பிரார்த்தனையோடு(2012) நவீன காவியம்

பாலமுனை பாறூக் குறும் பாக்கள்(2013) லிமெரிக் -- குறும்பாக்கள்.

வலைக்குள் மலர்ந்த வனப்பு (2017) கவிதைகள்

பாலமுனை பாறூக்கின் மூன்று நவீன காவியங்கள் (2020)

மீளப் பறக்கும் நங்கணங்கள் (2020) நவீன காவியம்

பாவேந்தல் பாடல்கள்(2022) பாலமுனை பாறூக்கின் இசைப் பாடல்கள்

பாவேந்தல் பொன்னேடு (2022)பாலமுனை பாறூக் அவர்களின் இலக்கியப் பொன்விழா சிறப்பு மலர்.

எழுவான் கதிர்கள்(1986) 24 கல்முனைப் பிரதேச கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு.

தொகுப்பாசிரியர்கள்:
அன்பு முகையதீன்
பாலமுனை பாறூக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவேந்தல் பாலமுனை பாறூக்

இலக்கியப் பொன்விழாக் கண்ட கவிஞர்.
கவிதை, இலக்கியத்திற்காக யாழ் மண்ணில்
வென்மேரி அறக் கட்டளையின்
'வாழ்நாள் சாதனையாளர் விருது' வென்றவர்.
கலாபூஷணம், கிழக்கு மாகாண வித்தகர் விருது,
சுவத விருதுகள் உட்பட பல இலக்கிய
விருதுகளைப் பெற்றவர்.
அரச சாஹித்ய,கொடகே சாஹித்ய விருதுகளை
தனது காவிய நூல்களுக்காகப் பெற்றவர்.
புலவர் மணி ஆ.மு ஷரிபுத்தீன் நினைவாக இடம்பெற்ற
சர்வதேச கவிதைப் போட்டி,
வலம்புரி (ஸ்தாபக) கவிதா வட்டம் நடத்திய
சர்வதேச கவிதைப் போட்டி,
கவிஞர் அப்துல் காதர் நினைவாக காத்தான்குடி
நவ இலக்கிய மன்றம் நடத்திய கவிதைப் போட்டி
என்பவற்றில் பரிசுகளைப் பெற்றவர்.
உள்நாட்டு வெளிநாட்டு இஸ்லாமிய இலக்கிய மாநாடுகளில்
பங்கு கொள்பவர். வானொலி மேடைக் கவியரங்குகளுக்கு
தலைமை வகித்துச் சிறப்பிப்பவர்.
பல நூல்களைத் தந்திருப்பவர்.

இப்போது
'பாவேந்தல் பாடல்கள்' தரும் அவருக்கு வாழ்த்துகள்.
இன்னும் பல நூல்களைத்தர இறைவன் அவருக்கு
தேக நலத்தினைத் தர வேண்டும் . அவருக்காக,
நமது பிரார்த்தனைகள்.

எழுகவி.

ISBN- 978-955-99311-6-4
9 789559 931164

89

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org